

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 225 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 13 – செவ்வாய்க்கிழமை 26 மார்ச் 2024 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 225 : Thiruvalluvar Year - 2055 - Panguni 13 - Tuesday 26 March 2024 - Madurai 10 Pages ₹ 5.00


### நாடாளுமன்றத் தேர்தல்: ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முழுவதும்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர் பிரச்சாரம்!

## எட்டையபுரம் - சிந்தலக்கரையில் இன்று மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்!

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார பயண விவரம் வருமாறு :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| **26.03.2024 (செவ்வாய்க்கிழமை)** | **தூத்துக்குடி இராமநாதபுரம்** |
| **27.03.2024 (புதன்கிழமை)** | **தென்காசி விருதுநகர்** |
| **29.03.2024 (வெள்ளிக்கிழமை)** | **தருமபுரி, கிருஷ்ணகிரி** |
| **30.03.2024 (சனிக்கிழமை)** | **சேலம், கள்ளக்குறிச்சி** |
| **31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **ஈரோடு நாமக்கல் கரூர்** |
| **02.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **வேலூர், அரக்கோணம்** |



| | |
|---|---|
| **03.04.2024 (புதன்கிழமை)** | **திருவண்ணாமலை ஆரணி** |
| **05.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **கடலூர், விழுப்புரம்** |
| **06.04.2024 (சனிக்கிழமை)** | **சிதம்பரம், மயிலாடுதுறை** |
| **07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **புதுச்சேரி** |
| **09.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **மதுரை, சிவகங்கை** |
| **10.04.2024 (புதன்கிழமை)** | **தேனி, திண்டுக்கல்** |
| **12.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **திருப்பூர், நீலகிரி** |
| **13.04.2024 (சனிக்கிழமை)** | **கோவை, பொள்ளாச்சி** |
| **15.04.2024 (திங்கட்கிழமை)** | **திருவள்ளூர் வடசென்னை** |
| **16.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **காஞ்சிபுரம், திருபெரும்புதூர்** |
| **17.04.2024 (புதன்கிழமை)** | **தென்சென்னை, மத்திய சென்னை** |

குறிப்பு : முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### மாநிலங்களின் கல்வி உரிமை, மொழி உரிமையை மீட்டெடுக்க

# ‘இந்தியா’ கூட்டணி வெல்வது காலத்தின் கட்டாயம்!

## தேனி நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**உசிலம்பட்டி, மார்ச் 26-**

**தேனி நாடாளுமன்றத் தொகுதிக் குட்பட்ட உசிலம்பட்டியில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு வாக்குகள் சேகரித்தார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அலைகடலெனத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் சிறப்புரையாற்றினார். “மாநிலங்களின் கல்வி உரிமை, மொழி உரிமையை மீட்டெடுக்க; “இந்தியா” கூட்டணி வெல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்!” என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தேனி நாடாளுமன்றத் தொகுதியில், நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியான, `இந்தியா கூட்டணி’ சார்பாக கழகத்தின் வெற்றி வேட்பாளராக, நம் வெற்றிச் சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிற தங்க தமிழ்ச் செல்வன் அவர்களுக்கு வாக்கு சேகரிக்கிற இந்தச் சிறப்பான பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.



கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தல், 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் என இரண்டு தேர்தல்களிலும் உசிலம்பட்டி மக்கள் நம்மை ஏமாற்றி விட்டீர்கள். மறுபடியும் ஏமாற்றுவீர்களா? இப்போது மறுபடியும் ஏமாற்றினீர்கள் என்றால், நாம்தான் ஏமாந்து போவோம்.

**மிகப்பெரிய எழுச்சி**

நான் பார்த்த மூன்று நாடாளுமன்றத் தொகுதிகளில் இந்த தேனி தொகுதியில்தான் மிகப்பெரிய எழுச்சி, மிகப்பெரிய ஆரவாரம், மிகப்பெரிய உற்சாகத்தைக் காண்கிறேன். ஆனால், இந்த தேனி நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒரு மிகப்பெரிய சிறப்பு இருக்கிறது.

அது என்ன சிறப்பு என்று உங்களுக்கே தெரியும். சென்ற முறை 2019 இல் 39 தொகுதிக்கு 38 தொகுதி வெற்றி பெற்றோம். லட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். ஆனால், தேனி நாடாளுமன்றத் தொகுதியை மட்டும் நான் நம்பவே மாட்டேன்.

இந்த முறை நீங்கள் அதைச் செய்து விடுவீர்களா? எந்தச் சின்னத்திற்கு வாக்களிக்கப் போகிறீர்கள்? கையைக் காட்டிச் சொல்லுங்கள்.

(மக்களெல்லாம் கையை உயர்த்தி பலத்த குரலில் “உதயசூரியன்” என்கிறார்கள்) உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, அண்ணன் தங்க தமிழ்ச் செல்வன் அவர்களை லட்சக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து நீங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

**புதிய கல்விக் கொள்கை**

புதிய கல்விக் கொள்கை மூலமாக, குலக்கல்வியை மறுபடியும் ஒன்றிய அரசு திணிக்கப் பார்க்கிறது. குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். குலக்கல்வித் திட்டம் என்றால் என்ன? அப்பா என்ன தொழில் செய்கிறாரோ அதைத்தான் குழந்தையும் செய்ய வேண்டும், படிக்கக்கூடாது, வேலைக்குப் போகக்கூடாது. அப்பா செருப்பு தைத்தால், மகனும் செருப்பு தைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள்.

இதுவரைக்கும் இந்த ஐந்து வருடத்தில் இந்தி, சமஸ்கிருதத்தின் வளர்ச்சிக்கு கிட்டத்தட்ட 1,500 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், தமிழ் வளர்ச்சிக்கு இதுவரை எந்த நிதியும் ஒதுக்கவில்லை.

மோடி இங்கு வந்து நன்றாக வடை சுடுவார். வந்து பேசும்போது திருக்குறள் எல்லாம் பேசுவார். யாருக்குமே புரியாது. ஆனால் இதுவரைக்கும் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை.

கல்வி உரிமை மொழியுரிமை ஆகியவற்றை நாம் மீட்டெடுக்க வேண்டும் என்றால் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது காலத்தின் கட்டாயம்.

**கொரோனா பெருந்தொற்று**

2021இல் நாம் ஆட்சிக்கு வரும்போது என்ன நிலைமை என்று உங்களுக்குத் தெரியும். கொரோனா பெருந்தொற்று. நாம் அனைவரும் வீட்டில் அடைந்து கிடந்தோம்.

மோடி என்ன செய்தார்? திடீரென்று, ‘எல்லோரும் வீட்டிற்கு வெளியே வாருங்கள், விளக்கை ஏற்றுங்கள், தட்டு எடுத்து வாருங்கள், ஒலி எழுப்புங்கள்.

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 26-03-2024

# தோல்வி பயத்தில் தப்பாட்டம்!

400 இடங்களைக் கைப்பற்றுவோம், 370 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று பம்மாத்து காட்டும் பா.ஜ.க.வுக்கு உண்மையில் 160க்கும் குறைவான இடங்கள் தான் கிடைக்கும் என்று மத்திய உளவுத்துறை அறிக்கை கொடுத்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. அதை விட முக்கியமாக பா.ஜ.க.வின் கோட்டை என்று சொல்லப்படும் மாநிலங்களில் அறிவிக்கப்பட்ட பா.ஜ.க. வேட்பாளர்கள் பின்னங்கால் பிடறியில் அடிபட தப்பித்து ஓடிக் கொண்டு இருக்கிறார்கள். குஜராத், உ.பி. போன்ற மாநிலங்களிலேயே பா.ஜ.க. வேட்பாளர்கள் போட்டியில் இருந்து விலகிக் கொண்டு இருக்கிறார்கள். வடகிழக்கு மாநிலங்கள் சிலவற்றில் போட்டியில் இருந்து பா.ஜ.க.வே விலகிவிட்டது.

'தென் மாநிலங்களில் வெற்றி பெற முடியாது - வட மாநிலங்களில் வெற்றி பெற்றுவிடுவோம்' என்று சொல்லி வந்தார்கள் சில வாரங்களுக்கு முன்பு வரை. இப்போது, வட மாநிலங்களின் நிலவரமும் கலவரமாக இருக்கிறது பா.ஜ.க.வுக்கு.

**இதனால் ஏற்பட்ட ஆத்திரமும் கோபமும் கண்ணை மறைக்கிறது பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு. தோல்வி பயத்தில் எதைச் செய்வது, எதைச் செய்யக் கூடாது என்பதே தெரியாமல் மூர்க்கத்தனமான சர்வாதிகார நடவடிக்கைகளைச் செய்து வருகிறார்கள்.** டெல்லி முதலமைச்சர் அரவிந்த கெஜ்ரிவால் அவர்களைக் கைது செய்திருப்பது அத்தகைய நடவடிக்கைதான்.

அரசியல் பழிவாங்கும் எண்ணத்துடன் டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா கைது செய்யப்பட்டு 13 மாதங்களாகச் சிறையில் இருக்கிறார். ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டுள்ளார். தெலுங்கானா மாநில முன்னாள் முதலமைச்சர் சந்திரசேகர ராவ் அவர்களின் மகள் கவிதா சில நாட்களுக்கு முன்னாள் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலையும் கைது செய்துள்ளார்கள். இது அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கையே.

இந்தியா முழுமைக்கும் நாடாளுமன்றத் தேர்தல் களம் சூடாகி வருகிறது. பிரதமர் நரேந்திரமோடி மீதான மக்களின் கோபம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. தேர்தல் பத்திரங்கள் என்ற பெயரால் மாபெரும் முறைகேடுகளில் இறங்கி உச்சநீதிமன்றத்தால் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளது பா.ஜ.க. **'தேர்தல் பத்திரங்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படையுங்கள்' என்று பாரத ஸ்டேட் வங்கிக்கு கடுமையான உத்தரவைப் போட்ட பிறகும் அவர்களைச் செயல்பட விடாமல் தடுத்து வந்தது பா.ஜ.க. அரசு. இறுதி வரை உச்சநீதிமன்றம் தனது பிடியை இறுக்கமாக வைத்திருந்த நிலையில் அனைத்து விபரங்களையும் பாரத் ஸ்டேட் வங்கி வழங்கிவிட்டது. இந்த விபரங்கள் முழுமையாக வெளியானால் பா.ஜ.க.வின் முகத்திரை கிழியும் என்பதால் அதைத் திசை திருப்புவதற்காக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்துள்ளார்கள்.**

பா.ஜ.க.வின் யோக்கியதையை ஆம் ஆத்மி கட்சி அம்பலப்படுத்தி இருக்கிறது.

**"மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்ற பா.ஜ.க. தலைவர் நட்டாவை அமலாக்கத்துறை கைது செய்ய வேண்டும்"** என்று கோரிக்கை வைத்துள்ளது ஆம் ஆத்மி கட்சி.

**"மதுபான முறைகேடு புகாரில் கைது செய்யப்பட்ட அரவிந்தோ ஃபார்மா இயக்குனரிடம் பா.ஜ.க. ரூ.55 கோடி தேர்தல் நன்கொடை பத்திரத்தைப் பெற்றுள்ளது. ரூ.55 கோடிக்கு பா.ஜ.க.வுக்கு தேர்தல் பத்திரம் வழங்கிய பின்னர் அரவிந்தோ ஃபார்மா இயக்குனர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். மதுபான வழக்கு குற்றவாளியிடம் இருந்து ரூ.55 கோடி நன்கொடை பெற்றது குறித்து பிரதமர் மோடியும், பா.ஜ.க. தலைவர் நட்டாவும் விளக்கம் அளிக்க வேண்டும். இது குறித்து அமலாக்கத்துறையும் விளக்கம் அளிக்க வேண்டும்"** - என்று ஆம் ஆத்மி கட்சி கோரிக்கை வைத்துள்ளது. இதைப் பற்றி இது வரை பிரதமரோ, உள்துறை அமைச்சரோ வாய் திறக்கவில்லை.

தனக்கு எதிராக 'இந்தியா' என்ற வலிமையான கூட்டணியை எதிர்க் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து அமைத்தது முதல் நிலை கொள்ளாமல் தவறுகளுக்கு மேல் தவறுகளைச் செய்து வருகிறது பா.ஜ.க. தலைமை. இது போன்ற கைதுகள், அரட்டல், மிரட்டல்கள் அனைத்தும் 'இந்தியா' கூட்டணியை வலிமையாக ஆக்கியதே தவிர பலவீனப்படுத்தவில்லை. அரைக்க அரைக்க சந்தனம் மணப்பதைப் போல, தாக்குதல் அதிகமாக அதிகமாக கூட்டணியும், கூட்டணித் தலைவர்களும் வலிமை அடைகிறார்கள். இதைத்தான் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பார்க்கிறோம்.

சி.பி.ஐ., அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தவறாக பயன்படுத்தும் பா.ஜ.க.வை கண்டித்து மார்ச் 31 ஆம் தேதி 'இந்தியா' கூட்டணி சார்பாக டெல்லியில் போராட்டம் நடைபெற இருக்கிறது. சி.பி.ஐ., அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தேர்தல் ஆணையத்திடம் கட்டுப்பாட்டில் வைக்கவும் இக்கட்சிகள் வலியுறுத்தி இருக்கிறார்கள். அரவிந்த் கெஜ்ரிவால் கைது, நடுநிலையாளர்களை மட்டுமல்ல; பா.ஜ.க. ஆதரவாளர்களையும் சிந்திக்க வைத்துள்ளது. 'ஐயோ! இதனால் பா.ஜ.க.வுக்கு கெட்ட பெயர் ஏற்பட்டுள் ளதே' என்று பா.ஜ.க. ஆதரவாளர்களும் பதறத் தொடங்கி இருக்கிறார்கள்.

தேர்தலை மக்கள் மன்றத்தில் எதிர்கொள்ள முடியாமல் அமலாக்கத் துறை, சி.பி.ஐ., வருமானவரித்துறை போன்ற புலனாய்வு அமைப்புகளின் மூலமாக எதிர்கொள்வது கோழைத்தனம் ஆகும். இவை அரசியலில் இரு பக்கமும் பாயும் ஆயுதங்கள் என்பதை யாரும் மறந்து விட வேண்டாம்.

**டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை கைது செய்வதன் மூலமாக 'இந்தியா' கூட்டணித் தலைவர்களை மிரட்டிப் பார்க்க நினைத்தால் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் ஏமாந்து போவார்கள். நாடு முழுவதும் நடக்கும் அனைத்து அசைவுகளையும் மக்கள் உன்னிப்**பாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அடக்குமுறை மூலமாக யாரும் வென்றதாக வரலாறும் இல்லை. ஆணவக்காரர்களின் ஆட்டத்தை மக்கள் அனுமதித்ததும் இல்லை.

## கெஜ்ரிவாலைக் கண்டு பா.ஜ.க.வுக்கு அச்சம்! பஞ்சாப் முதல்வர் பேட்டி!

டெல்லி, மார்ச் 26–

டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலைக் கண்டு பா.ஜ.க. அச்சமடைந்து உள்ளதாக பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில், கெஜ்ரிவால் கைது செய்யப்படுவார் என்று நாங்கள் ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறோம். கெஜ்ரிவால் போன்ற பெரிய தலைவர் பிரசாரம் செய்வதை அவர்கள் (பா.ஜ.க.) விரும்பவில்லை. மக்களவைத் தேர்தலில் கெஜ்ரிவால் பிரசாரம் செய்வதைத் தடுக்கவே அவரை ஒன்றிய பா.ஜ.க. அரசு கைது செய்துள்ளது.

அவரைப் பார்த்து பா.ஜ.க. பயப்படுகிறது. எனவேதான், அவரையும் ஆம் ஆத்மி கட்சியையும் அழிக்க விரும்பு கிறார்கள். அரசியல் ரீதியால் பழிவாங்கும் நோக்குடனேயே கெஜ்ரிவால் மீது அமலாக்கத் துறை வழக்கு தொடர்ந்துள்ளது.

இவ்வாறு பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் குறிப்பிட்டுள்ளார்.



வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த், தேர்தல் அதிகாரி – மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமியிடம் வேட்பு மனுதாக்கல் செய்தார். கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மற்றும் வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர் டீக்காராமன் உடன் உள்ளனர்.

### ஆலையை திறக்க நிர்வாகம் உச்சநீதிமன்றத்தில் முயற்சித்தபோது – மக்களின் பக்கம் நின்று

# ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## தூத்துக்குடி தேர்தல் பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேச்சு!

தூத்துக்குடி, மார்ச் 26 -

தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி வேட்பாளரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி நேற்று முன்தினம் (24.3.2024) தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

தேர்தல் பிரச்சாரத்தில் கனிமொழி கருணாநிதி பேசியதாவது:-

தூத்துக்குடி என்பது எனக்கு இரண்டாவது தாய் வீடாக உணரக்கூடிய வகையில் உள்ளது. நாடும் நமது, நாற்பதும் நமது என்ற வகையில் நாம் பணியாற்ற வேண்டும் எனவும் தமிழகத்தை தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டு தமிழகத்துக்கு வர வேண்டிய நிதியையும், ஏன் வெள்ள நிவாரணம் கூட தராமல் வஞ்சித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

பிரதமர் மோடி தற்போது அடிக்கடி தமிழகத்துக்கு வருகிறார் வெள்ளம் பாதித்த நேரங்கள் கூட வராத பிரதமர் தற்போது வருகிறார் வந்து தி.மு.க.வை அழித்து விடுவதாக பேசி வருகிறார். தி.மு.க.வை யாராலும் அழிக்க முடியாது, அழித்து விடுவேன் என சொன்னவர்கள்தான் காணாமல் போய் உள்ளனர்.

**மக்களை ஏமாற்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசு!**

தி.மு.க. ஆட்சி மூலம் இந்த நாட்டுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்து வருகிறது. அதனால்தான் தற்போதைய இந்த தேர்தல் அறிக்கையில் கூட மகளிர் உரிமைத் தொகையை நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் எனவும் அதுபோல் காலை உணவுத் திட்டத்தையும் நாடு முழுவதும் அமல் செய்வோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பெட்ரோல் விலை டீசல் விலை மற்றும் கேஸ் விலை ஏற்றி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது இந்தியா கூட்டணி அரசு வரும் போது பெட்ரோல் விலை ரூபாய் 75, டீசல் விலை ரூபாய் 65, அதுபோல் காஸ் சிலிண்டர் விலை 500 ஆக அனைத்தும் குறைக்கப்படும். மக்களை விலைவாசியிலிருந்து காப்பாற்றும் அரசாக அந்த அரசு செயல்படும்.

மக்களுக்கு எந்தவித நிதி உதவியும் செய்யாமல் அதே போல ஒரு பைசா கூட வழங்காமல் தமிழ்நாட்டிலிருந்து வரி வசூல் பண்ணி அங்கே இருக்கக்கூடிய ஒன்றிய அரசுக்கு நாம் ஒரு ரூபாய் கொடுத்தால், அவர்கள் நமக்குத் திருப்பி கொடுப்பது 26 பைசா, ஆனால் உத்தரப் பிரதேசத்திலிருந்து 1 ரூபாய் வரி கொடுத்தால் 2 ரூபாய் 2 பைசா. எந்த அளவுக்கு அவர்கள் தமிழகத்தை, தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



அதேபோல ஒன்றிய பா.ஜ.க. கொண்டு வந்த சட்டத்திற்கு டெல்லியில் ஆதரவு கொடுத்தது அ.தி.மு.க. நாங்கள் இப்போது பிரிந்து நிற்கிறோம் என்றால் நம்பாதீர்கள். இரண்டு ஸ்டிக்கரும் மீண்டும் இணைந்து கொள்ளும். இங்கே இருக்கும் பெண்களின் உயர்கல்விக்காகப் புதுமைப்பெண் திட்டத்தில் மாதம் 1000 ரூபாய் வழங்கி வருகிறோம்.

**பா.ஜ.க. விரட்டி அடிக்கப்பட வேண்டும்!**

ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி போராட்டத்தில் 13 பேர் சுட்டுக்கொல்லப் பட்டனர். இந்த ஆலையை மீண்டும் திறக்க வேண்டுமென்ற போது, முதலமைச்சர் மக்கள் பக்கம் நின்று ஆலையை மூட நடவடிக்கை எடுத்தார். வரக்கூடிய இந்த தேர்தலிலே தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவிலிருந்தே பா.ஜ.க. விரட்டி அடிக்கப்பட வேண்டும். இந்தியா கூட்டணி இங்கு ஆட்சி அமைக்க வேண்டும்.

நம்முடைய இளைஞர்கள் கல்விக்காக வாங்கி இருக்கக் கூடிய கடன் ரத்து செய்யப்படும். அதுமட்டுமில்லாமல் நீங்க வெளியூர் போகும்போது ஒவ்வோர் இடத்திலும் சுங்கச்சாவடியில் நிறுத்தி காசு வாங்குகிறார்கள். அந்த சுங்கச்சாவடியில் வாங்கக்கூடிய காசு எல்லாம் நிறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய பொன்னான வாக்குகளை உதயசூரியன் சின்னத்தில் அளித்து மீண்டும் உங்களோடு பணியாற்றக் கூடிய வாய்ப்பை நீங்கள் எனக்கு அளிக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**அம்பானி, அதானிக்காக பாடுபடும் மோடி!**

இவர்கள் அரசியலால் மணிப்பூரில் எத்தனை பெண்கள் பாதிக்கப்பட்டனர், அதனை நான் கண் கூடாகப் பார்த்தேன். நான் பலமுறை தூத்துக்குடி விமானநிலையத்தில் சர்வதேச விமான நிலையமாக்க கோரிக்கை வைத்தேன், மறுக்கப்பட்டது. ஆனால், அம்பானி வீட்டில் கல்யாணம் ஒரு சின்ன விமான நிலையத்தை, பத்து நாட்களில் பன்னாட்டு விமான நிலையமாக மாற்றித் தருகிறார் பிரதமர் மோடி. அம்பானி, அதானி உத்தரவு போட்டால் அது நடக்கும், மக்கள் உதவி கேட்டல் நடக்காது. மக்களுக்காக பணியாற்றக்கூடிய இந்தியா கூட்டணி ஆட்சியில் அமர வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி பேசினார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளரும், சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் 'இந்தியா' கூட்டணிக் கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கலைஞர் அரங்கம், மாரியம்மன் கோயில், TMC காலனி ஜங்ஷன், காசி நாடார் ஆயில் மில், ஆமெரிக்கன் ஆஸ்பத்திரி அருகில், உருண்டையம்மன் கோவில் அருகே, கருப்பட்டி சொசைட்டி, பூபால்ராயபுரம், திரேஸ் புரம் ஜங்ஷன், புது தெரு, மட்டக்கடை, 2ஆம் கேட் போஸ் திடல், தேரடி, பள்ளிவாசல், PPMT ஜங்ஷன், சுமங்கலி கல்யாண மண்டபம், பீங்கான் ஆபிஸ், பக்கில்புரம், KSPS தியேட்டர், சிதம்பர நகர், பிரையண்ட் நகர் 12வது தெரு, 3ஆம் மைல், பழைய பஸ் ஸ்டாண்டு, அண்ணாநகர் ஆகிய இடங்களில் கனிமொழி கருணாநிதி பிரச்சாரம் செய்தார்.

### சிவகங்கை மாவட்டம் – சிங்கம்புணரி வடக்கு

# ஒன்றியக் கழகப் பொருளாளர் ஆ.பாஸ்கரன் இல்லத் திருமணம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையேற்று வாழ்த்துகிறார்!

சிவகங்கை, மார்ச் 26-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வடக்கு ஒன்றியக் கழகப் பொருளாளர் ஆ.பாஸ்கரன் இல்லத் திருமணம் 5.4.2024 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் சிங்கம்புணரி மணப்பட்டி யாதவா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தலைமையேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

மணவிழாவில் பேரூராட்சி சேர்மன் ந.அம்பலமுத்து வரவேற்கிறார்.

இராம.அருணகிரி, ஹாஜி.உசைன், தொழிலதிபர் நவநீதகிருஷ்ணன், அஞ்சப்பர் ஜெயராமன், சேங்கை மாறன், அ.கணேசன், பூமிநாதன், சின்னத்துரை, பாலசுப்பிரமணியன், கல்லல் சுப்பிரமணியன், மதிசூடியன், கதிர்வேல், மகேந்திரபூபதி, ராஜாமுகமது, அவைத் தலைவர் சிவக் குமார், இந்தியன் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



இம்மணவிழாவில் சண்முகவடிவேல், சோமசுந்தரம், ரவி, கேஎஸ்.நாராயணன், சிங்காரம், முறையூர் சுரேஷ், அ.ராசு, செல்வகுமார், ஏடிஎன்.ரவி, டாக்டர் அன்புமணி நாகராஜன், அயலக அணி ஆர். புகழேந்தி, ஆனந்தகிருஷ்ணன், எஸ்.முத்துக்குமார், செந்தில்கிருஷ்ணன், மனோகரன், திரைப்படத்துறை முருகேசன், ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்து கின்றனர்.

ஒன்றிய துணைச் செயலாளர் சிவபுரி எஸ்.சேகர் நன்றி கூறுகிறார்.

### 100 ஆண்டுகளுக்குப் பின்

## முக்கிய சந்திர கிரகணம்!

### இந்தியாவில் தென்படவில்லை!

புதுடெல்லி, மார்ச் 26–

சூரியன் – சந்திரன் – பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர் கோட்டில் வரும்போது கிரகணம் ஏற்படுகிறது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திரன் கடந்து செல்லும்போது சூரிய கிரகணம் ஏற்படுகிறது. இந்த நிகழ்வின்போது சூரியனின் ஒளியை சந்திரன் தற்காலிகமாகத் தடுக்கிறது. அந்த நேரத்தில் பூமியின் சில இடங்களில் நிழல் ஏற்படும். இதேபோல் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வந்து, சூரியனின் நேரடிக் கதிர்கள் சந்திரனை ஒளிரவிடாமல் தடுக்கும்போது சந்திர கிரகணம் ஏற்படுகிறது.

அவ்வகையில் நடப்பு ஆண்டின் முதல் கிரகணமான பெனும்பிரல் சந்திர கிரகணம் 100 ஆண்டுகளுக்குப் பிறகு நேற்று காலை தொடங்கியது. 10.23 மணிக்கு தொடங்கிய கிரகணம் மாலை 03.02 மணி வரை நீடிக்கும என தெரிவிக்கப்பட்டுள்ளது. பகல் நேரத்தில் கிரகணம் நிகழ்வதால் இதனை இந்தியாவில் காண முடியாது. வடக்கு மற்றும் தென் அமெரிக்கா முழுவதும் கிரகணத்தை காணலாம்.



மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமங்கலம், திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் நடைபெற்றதில் விருதுநகர் நாடாளுமன்ற 'இந்தியா' கூட்டணி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் மாணிக் தாகூரை மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் – வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றியனார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

# தேனி தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி!

இப்படிச் செய்தால் கோவிட் பயந்து ஓடிவிடும்' என்று சொன்னாரா இல்லையா?

இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக நம் முதலமைச்சர்தான் தடுப்பூசி போட்டு, விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இந்த கோவிட்டிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால், அனைவரும் தடுப்பூசிப் போட்டுக்கொள்ள வேண்டும் என்று இந்தியாவிலேயே முதன்முதலாகச் சொன்னது நமது முதல்வர் அவர்கள்தான்.

கோவிட் பாதுகாப்பு உடையை அணிந்து கொண்டு கோவிட் வார்டுக்குள் சென்ற ஒரே முதலமைச்சர் நம் முதலமைச்சர் அவர்கள்தான்.

**கணக்கு இல்லை**

பத்து வருட கால ஒன்றிய பா.ஜ.க அரசின் ஊழலைப் பற்றி, சி.ஏ.ஜி. என்ற அரசு அமைப்பு சொல்கிறது. அவர்கள் வேலை, மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் செலவுகளைத் தணிக்கை செய்வது. அவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு அறிக்கை விடுவார்கள்.

இப்போது அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால், கடந்த 10 வருடத்தில் ஏழரை லட்சம் கோடி ரூபாயை ஒன்றிய அரசு செலவு செய்திருக்கிறது. அந்த ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்குக் கணக்குக் கிடையாது. ஏழரை லட்சம் கோடி ரூபாய் எங்கே போனது, என்று தெரியவில்லை. ஒரு கிலோமீட்டர் ரோடு போடுவதற்கு ஒன்றிய பா.ஜ.க அரசு எவ்வளவு தெரியுமா செலவு கணக்கு காட்டி இருக்கிறது? சுமார் 250 கோடி ரூபாய் !

அது மட்டுமல்ல. 'ஆயுஷ்மன் பாரத்' என்ற ஒரு திட்டம். இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்று ஒரே நம்பரிலிருந்து போய் இருக்கிறது. அதுமட்டுமல்ல, `பி.எம். கேர்ஸ் ஃபண்ட்' என்று ஒன்று இருக்கிறது. அதில் இதுவரைக்கும் 32 ஆயிரம் கோடி ரூபாயை பா.ஜ.க. வசூல் செய்திருக்கிறது. அதற்கும் கணக்குக் கிடையாது. யார் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டேன் என்கிறார்கள்.

இப்போது ஐ.பி.எல்.மேட்ச் நடந்து கொண்டிருக்கிறது. அதில் நிறைய அணிகள் இருக்கின்றன. சென்னை, டெல்லி, மும்பை, பெங்களூர் அணி போன்று நிறைய அணிகள் இருக்கின்றன. இவர்கள் இந்தியாவில் ஒரே குழுவில்தான் விளையாடுவார்கள். ஐ.பி.எல் தொடரும் அ.தி.மு.க.வும் ஒன்றுதான். அ.தி.மு.க.வில் பார்த்தீர்கள் என்றால், டி.டி.வி அணி, ஓ.பி.எஸ் அணி, சசிகலா அணி, ஈ.பி.எஸ் அணி, மோடி அணி, ஜெ.தீபா அணி, ஜெ.தீபாவின் டிரைவர் அணி என பல அணிகள் உள்ளன.

### அ.தி.மு.கவில் பல அணிகள்!

*இப்போது ஐ.பி.எல்.மேட்ச் நடந்து கொண்டிருக்கிறது. அதில் நிறைய அணிகள் இருக்கின்றன. சென்னை, டெல்லி, மும்பை, பெங்களூர் அணி போன்று நிறைய அணிகள் இருக்கின்றன. இவர்கள் இந்தியாவில் ஒரே குழுவில்தான் விளையாடுவார்கள். ஐ.பி. எல் தொடரும் அ.தி.மு.க.வும் ஒன்றுதான். அ.தி.மு.க.வில் பார்த்தீர்கள் என்றால், டி.டி.வி அணி, ஓ.பி.எஸ் அணி, சசிகலா அணி, ஈ.பி.எஸ் அணி, மோடி அணி, ஜெ.தீபா அணி, ஜெ.தீபாவின் டிரைவர் அணி என பல அணிகள் உள்ளன.*

என்ன, ஐ.பி.எல். போட்டியில் வீரர்கள் காசு வாங்கிக் கொண்டு விளை யாடுவார்கள். அதைத்தான் இப்போது அ.தி.மு.க. அணிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது.

நான் இன்று இங்கு வந்திருக்கிறேன். உங்களிடம் பேசி இருக்கிறேன். நீங்களும் கேட்டு இருக்கிறீர்கள். கேட்டுவிட்டு கலைந்து போய் விடக்கூடாது. இதற்குப் பிறகு தலைவர் அவர்கள் இன்னும் ஒரு வாரத்தில் வருவார். உங்களை எல்லாம் சந்திப்பார். உங்களுடன் உரையாற்றுவார்கள்.

**உங்கள் பொறுப்பு!**

அடுத்த 19 ஆம் தேதி தேர்தல். இன்றைக்கு தேதி 23. இன்னும் 23, 24 நாட்கள்தான் இருக்கின்றன. அடுத்த 24 நாட்கள், இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் ஒவ்வொரு வீடாக, ஒவ்வொரு வாக்காளராக நீங்கள் பிரித்துக் கொள்ள வேண்டும். `இந்தப் பத்து வாக்காளருக்கு நான் பொறுப்பு', `இந்த ஐந்து வீட்டிற்கு நான் பொறுப்பு' என அவர்கள் அனைவரையும் 19 ஆம் தேதி வாக்குச் சாவடிக்கு அழைத்து வந்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வைக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

நீங்கள் மூன்று லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து விடுங்கள், நான் மாதம் இரண்டு நாள் தேனியில் வந்து உங்களுடன் தங்குகிறேன்.

தமிழ்நாடு, புதுச்சேரி 40 க்கு 40 தொகுதி வெற்றி பெறப்போவது உறுதி. ஆனால், அத்தனை தொகுதிகளை விட எனக்கு, தலைவருக்கு, இந்த தேனி



அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனி நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தின்போது, தம்மை வரவேற்று புத்தகம் அன்பளிப்பாக வழங்கிய சிறுமியிடம் வாஞ்சையோடு அளவளாவி மகிழ்ந்து வாழ்த்துகிறார்!

தொகுதி மிக மிக முக்கியம். அதை நீங்கள் உணர்ந்து விட்டீர்களா? வருகின்ற ஜூன் 3 ஆம் தேதி கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்தநாள். ஜூன் 4 ஆம் தேதி தேர்தல் வாக்கு எண்ணிக்கை. கலைஞரின் உடன்பிறப்புகள் நீங்கள் அத்தனை பேரும் ஒரு உறுதி மொழியை எடுத்துக் கொள்ளுங்கள். ஜூன் 3 ஆம் தேதி கலைஞரின் பிறந்த நாள் பரிசாக தேனி தொகுதி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வெற்றி பெற வைத்துக் காட்ட வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன். பாசத்தோடு கேட்கிறேன். உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாகக் கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால் முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன்.

உதயசூரியன் சின்னத்தில் அண்ணன் தங்க தமிழ்ச் செல்வன் அவர்களுக்கு வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து, அவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்புங்கள். உங்கள் வரவேற்புக்கும் அன்புக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.மூர்த்தி, தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி.ராஜா, தொகுதிப் பார்வையாளர் மாரியப்பன் கென்னடி, நகர கழகச் செயலாளர் தங்கபாண்டியன், எம்.ஆர்.எம்.டி.பழனி, எஸ்.வி.எஸ்.முருகன், அஜித் பாண்டியன், ஜெயச்சந்திரன் முத்து ராமன், சுதாகர், செல்வ பிரகாஷ், சங்கரபாண்டி, ஜெயராமன், மாவட்டத் துணைச் செயலாளர் சிவனாண்டி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இள. மகிழன், நகரக் கழக முன்னாள் செயலாளர் தங்கமயில் பாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விமல் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

டெல்லி பல்கலைக்கழக மாணவர் சங்கத் தேர்தலில் இடது முன்னணியினர் பெற்ற வெற்றி

# பாசிச சக்திகளின் வீழ்ச்சிக்கு கட்டியம் கூறுவதாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, மார்ச் 26-**

**டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர் சங்கத் தேர்தலில் இடது முன்னணியினர் பெற்ற வெற்றி, பாசிச சக்திகளின் வெற்றிக்கு கட்டியம் கூறுவதாக உள்ளது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ள இடது முன்னணியினருக்கு எனது வாழ்த்துகள்.**

**ஏ.பி.வி.பி அமைப்பினரின் வன்முறை வழிமுறைகளும், கடைசி நிமிடத்தில் இடது வேட்பாளர் ஸ்வாதி சிங் அவர்களின் வேட்புமனுவை நிராகரித்ததும் அவர்களின் தோல்வி பயத்தை அம்பலப் படுத்திவிட்டது. இத்தனை வெட்கக்கேடான செயல்களில் அவர்கள் ஈடுபட்டாலும், JNU மாணவர்கள் தங்களது முற்போக்கு செறிந்த மரபை எப்போதும் போல நிரூபித்து விட்டனர்.**

**வலதுசாரி பாசிச சக்திகளின் வீழ்ச்சிக்குக் கட்டியம் கூறுவதாக இந்த வெற்றி அமைந்துள்ளது. வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய மக்கள் ஒன்று சேர்ந்து பா.ஜ.க.வை வீழ்த்துவார்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

10-ஆம் வகுப்பு மாணவச் செல்வங்களே;

# தேர்வை நம்பிக்கையோடு எழுதி வெற்றி பெறுங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, மார்ச் 26-

10-ஆம் வகுப்பு மாணவச் செல்வங்களே பதற்றமின்றி நம்பிக்கையோடு தேர்வு எழுதி வெற்றி பெறுங்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவச் செல்வங்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வை எழுதவுள்ள எனதருமை மாணவச் செல்வங்களே... All the best!**

**நீங்கள் பதற்றமின்றித் தேர்வை எதிர்கொள்ளத்தான் வினாத்தாளைப் படித்துப் பார்க்க முதலில் 10 நிமிடங்கள் வழங்கப் படுகிறது. அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.**

**இதனை மற்றுமொரு தேர்வாகக் கருதி நம்பிக்கையோடு எழுதி வெற்றி பெறுங்கள்.**

**பெற்றோர்களும் உங்கள் பிள்ளைகள் உரிய நேரத்தில் தேர்வு மையத்துக்குச் சென்றிடுவதை உறுதிசெய்யுங்கள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

---

மதுரை நாடாளுமன்றத் தேர்தல்:

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தேர்தல் பணிக்குழு!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிவிப்பு!

*மதுரை, மார்ச் 26-*

மதுரை நாடாளுமன்றத் தேர்தலையொட்டி மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தேர்தல் பணிக் குழு பொறுப்பாளர்களை மாவட்டச் செயலாளர் கோ.தளபதி அறிவித்து ள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

**மதுரை வடக்கு தொகுதி தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள்** P.பாக்கியநாதன், (மாநில விவசாய அணி துணைச்செய லாளர்), D.R.ரவீந்திரன், (பொதுக் குழு உறுப்பினர்), பொன் மு.சேதுராம லிங்கம், S.ராகவன், (மாவட்ட துணைச் செயலாளர்), A.K.ஆறு முகம், (பொதுக்குழு உறுப்பினர்), பி.அறிவுநிதி, (பகுதிச் செயலாளர்), T.A.குரும்பன், (பகுதிச் செயலாளர்), G.ராதா கிருஷ்ணன், (பகுதிச் செயலாளர்) எஸ்.சித்திக், (பகுதிச் செயலாளர்), சரவணன் அம்பலம், தா.ஜெயராஜ் எம்.சி., T.துரை கோபால் சாமி, (மாணவரணி அமைப்பாளர்), V.பால கிருஷ்ணன், (தகவல் தொழில்நுட்ப அணி) டாக்டர்.வெங்கடேசன் சுப்பையா, (மருத்துவ அணி அமைப்பாளர்) ப.அண்ணாதுரை, திருமதி.சரவண புவனேஸ்வரி MC, (மண்டலத் தலைவர்), காவேரி சொக்கலிங்கம், (விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர்) R.ஹரிஷ்குமார், (தகவல் தொழில் நுட்ப அணி) J.நரேந்திரன்,



(சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர்) A.வினோத், (பொறியாளர் அணி அமைப்பாளர்) , G.சந்துரு, (மாணவரணி துணை அமைப்பாளர்) K.மருது பாண்டி, P.பாண்டி, நீதிராஜன், K.சவரிராயன்.

**மதுரை தெற்கு தொகுதி தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள்** மா.முகேஷ்சர்மா MC, (மண்டல தலைவர்) R.முருகவேல், (மாவட்டப் பொருளாளர்) A.சையது அபுதாகீர் MC, (பொதுக் குழு உறுப்பினர்) திருமதி. விஜயலட்சுமி பாண்டியன் MC, (பொதுக்குழு உறுப்பினர்) A.அருண்குமார் MC, (பொதுக்குழு உறுப்பினர்) P.மின்னல்கொடி, அ.அன்வர்உசேன், (பகுதிச் செயலாளர்) R.M.முத்து, (பகுதிச் செயலாளர்) ப.ரமேஷ் குமார் (எ) ஜீவன், (பகுதிச் செயலாளர்) போஸ் முத்தையா, (பகுதிச் செயலாளர்) மதிச்சியம் N.சிவகுமார், K.A.உஸ்மான் அலி, (சிறுபான்மை அணி அமைப்பாளர்) P.சுப்பிரமணியன், (விவசாய அணி அமைப்பாளர்) திருப்பதி, (மாணவரணி துணை அமைப்பாளர்) சே.சந்திர காசன், (தகவல் தொழில் நுட்ப அணி) P.V.சேகர், N.முருகன், (அமைப்புசாரா நல வாரியம்) திருமதி. B. சாந்தி, (மகளிர் அணி) திலீபன் சக்கரவர்த்தி, செல்லூர் G.ரவி,

**மதுரை மேற்கு தொகுதி தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள்** K.தனசெல்வம், (தலைமைச் செயற்குழு உறுப்பினர்), J.மூவேந்திரன், (மாவட்ட துணைச் செய லாளர்) மதிவெங்கடேஷ், R.அன்பழகன், (பகுதிச் செயலாளர்)

கு.காவேரி MC, (பகுதிச் செயலாளர்) S.V.சுதன் MC, (பகுதிச் செயலாளர்)

K.தவமணி, (பகுதிச் செயலாளர்) R.K.ஜெயராமன், (திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றிய செயலாளர்), K.S.ராஜாமணி, (பரவை பேரூர்கழகச் செயலாளர்) சி.நாகநாதன் MC, T.தேவராஜ், (வட்டச் செயலாளர்) J.தேவசேனன், (வழக்கறிஞர் அணி அமைப்பாளர்) A.M.கண்ணன், (இலக்கிய அணி அமைப்பாளர்) உ.ஆறுமுகம், M.V.முனியசாமி, (கலை, இலக்கிய அணி அமைப்பாளர்)

ரா.முத்துகுமார், (விளையாட்டு அணி அமைப்பாளர்) ந.மணிகண்டன், (அமைப்புசாரா ஓட்டுனர் அணி) R.செல்லப்பாண்டி, (தொண்டரணி அமைப்பாளர்) K.C.தண்டபாணி, (தகவல் தொழில்நுட்ப அணி), திருமதி.C.தமிழ்ச்செல்வி, (தகவல் தொழில்நுட்ப அணி) ஹரிசங்கர், (மாணவரணி துணை அமைப்பாளர்) மதன்மோகன், (மாணவரணி துணை அமைப்பாளர்)

சசிதேவா, திருமதி.சிவனம்மாள், (மகளிர் அணி) திருமதி.ராமலட்சுமி, (மகளிர் அணி) ஆ.ஜெசி

**மதுரை மத்திய தொகுதி தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள்** மா.ஜெயராம் MC, (தலைமைச் செயற்குழு உறுப்பினர்) மா.ஒச்சுபாலு, (மாவட்ட அவைத்தலைவர்) திருமதி.சி.சி ன்னம்மாள், (மாவட்ட துணைச் செயலாளர்)

திருமதி.இந்திராணி, (மேயர்), P.T.மணிமாறன், (பொதுக்குழு உறுப்பினர்)

வைகை M.பரமன், (பொதுக்குழு உறுப்பினர்) M.G.முத்துகணேசன், (பொதுக்குழு உறுப்பினர்) S.S.மாறன், (பகுதிச் செயலாளர்), M.சரவ ணபாண்டியன், (பகுதிச் செயலாளர்) சு.பா.கண்ணன், (பகுதிச் செயலாளர்), P.K.செந்தில், (பகுதிச் செயலாளர்) R.சௌந்தர்ராஜன், (இளைஞரணி அமைப்பாளர்) பொன் வசந்த் அ.நீலமேகம், அ.மாணிக்கம், பல்ராம் தனுஷ் கோடி, திருமதி.P.பாண்டிச்செல்வி MC, (மண்டலத் தலைவர்) S.M.R.அருண்குமார், திருமதி.சி.நூர்ஜஹான், (மகளிர் தொண்டரணி அமைப்பாளர்) P.வெள்ளத்துரை, (நெசவாளர் அணி அமைப்பாளர்) A.செய்யது அலி, (அயலக அணி அமைப்பாளர்) கா.காமாட்சி, (தொழிலாளர் அணி அமைப்பாளர்) B.கந்தசாமி (எ) செல்வம், (வர்த்தக அணி அமைப்பாளர்)

E.L.பாலா, (ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர்) M.B.ராஜா, (மீனவர் அணி அமைப்பாளர்) P.ஜெய பிரகாஸ், (தகவல் தொழில் நுட்ப அணி) திருமதி.நித்தியதர்ஷினி, (மாணவரணி துணை அமைப்பாளர்) சுருளி, திருமதி.பாக்கியலட்சுமி, (மகளிர் அணி) திருமதி.பாக்கியம், (மகளிர் அணி)

திருமதி.பாண்டியம்மாள், (மகளிர் அணி) திருமதி.சுசிலா, (மகளிர் அணி)

M.P.சேது, எஸ்.சந்திரன்,

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



'இந்தியா' கூட்டணியின் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி சிதம்பரம், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதனைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் இராம. சுப்புராம் உள்ளார்.



தேனி நாடாளுமன்ற வேட்பாளர் தங்க தமிழ்செல்வன் அறிமுகம் மற்றும் கூட்டணி கட்சிகளின் கூட்டம், செயற்குழு ஆலோசனைக் கூட்டம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சரவணகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட அமைப்பாளர் செல்லப்பாண்டியன், மாவட்டப் பொருளாளர் சுரேஷ்,தேனி நகர செயலாளர் நாராயண பாண்டியன் மற்றும் ஒன்றியச் செயலாளர்கள், நகர செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர்களை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திண்டுக்கல் - மதுரையில் வாக்குச் சேகரிப்பு!




கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திண்டுக்கல் மக்களவை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தம் அவர்களை ஆதரித்து திண்டுக்கல் கிளாக் டவர் பகுதியில் – “அரிவாள் சுத்தியல் நட்சத்திரம்” சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார்.




கழக இளைஞர் அணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை மக்களவைத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணியின் சார்பில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி வேட்பாளர் சு.வெங்கடேசன் அவர்களை ஆதரித்து ஊமச்சிகுளம், மதுரை கோ. புதூர் பகுதியில் வெள்ளமெனத் திரண்ட மக்களிடையே வாக்குச் சேகரித்த காட்சி!

### வே.ஜெயபாலன் தலைமையில் - கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியின்

## ‘இந்தியா’ கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம் - ராணிஸ்ரீ குமார் அறிமுகக் கூட்டம்!

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் சிறப்புரை!

தென்காசி.மார்ச்.26-

தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி,கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இந்தியா கூட்டணி அனைத்துக் கட்சி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் தி.மு.க.வெற்றி வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் அறிமுக கூட்டம் தென்காசி குற்றாலம் காசி மேஜர்புரம் ஸ்ரீ முருகன் மகாலில் வைத்து

தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம், மாவட்ட காங்கிரஸ் செயலாளர் பழனி நாடார் எம்.எல்.ஏ. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் முத்துப்பாண்டியன், இந்திய கம்யூனிஸ்ட் இசக்கிதுரை, ம.தி.மு.க.சுதா பாலசுப்பிரமணியன், ராம உதயசூரியன்,விசிக பண்பொழி செல்வம்,ஜான்தாமஸ்,லிங்கம் வளவன்,வசந்தகுமார்,தமிழ் புலி சந்திரசேகர்,முஸ்லிம் லீக் அப்துல் அஜீஸ், ம.ம.க. சலீம்,ஆதி தமிழர் பேரவை கலிவரதன்,திராவிட தமிழர் கட்சி வீரபாண்டியன், மகாலிங்கம், மா.நீ.ம. அய்யாசாமி,ம.ஜ.க. அஜ்மீர், தாவக கணேசன்,ஆதித்தமிழர் கட்சி பொதிகை ஆதவன்,பார்வர்டு பிளாக் சுப்பிரமணியன்,த.மு.மு.க. அப்துல் ரகுமான் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. பொதுக்குழு உறுப்பினர் அருள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன்,தென்காசி நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.க.வெற்றி வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் பேசியதாவது.

கூட்டணிக் கட்சிகள் பிரியாமல் இருக்கும் ஒரே கட்சி தி.மு.க.தான்.

இந்தியா கூட்டணி கட்சியை வழிநடத்தி செல்வது நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள்தான்.40க்கு 40 நாம்தான்.

இந்தியா கூட்டணி வரப் போகிறது அதில் சகோதரி ராணியும் ஒரு எம்.பி ஆவார். ஜெயித்துவிட்டோம் என்ற நம்பிக்கை ராணி ஸ்ரீகுமார் முகத்தில் வந்துவிட்டது.பிரதமரை தேர்ந்தெடுக்கும் இடத்தில் நம் தளபதி அவர்கள் உள்ளார்.முதல்வர் அவர்கள் கை காண்பித்தாலும் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியைத் தேடித் தருவதன் மூலம் பிரதமரை தேர்வு செய்வது மக்களாகிய நீங்கள் தான். எல்லோரும் எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்து விட்டு கழகத்தினர்,இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், ஒருங்கிணைந்து தென்காசி நாடாளுமன்ற தொகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு ஓட்டு கேட்க வேண்டும்.4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ராணி ஸ்ரீகுமாரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

தென்காசி நாடாளுமன்றத் தொகுதி விருதுநகர் நாடாளுமன்ற தொகுதிக்கு சேர்த்து ஸ்ரீவில்லிபுத்தூரில் 27ஆம் தேதி வி.பி.எம் கல்லூரி அருகே நடைபெறும் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு தேர்தல் பரப்புரை ஆற்றுகிறார்கள்.இதில் 60,000,ம் பேர் பங்கேற்கின்றனர்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பேசினார்.

நிகழ்வில் தனுஷ் குமார் எம்.பி. மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி,கென்னடி,தமிழ்செல்வன்,மாவட்ட பொருளாளர் ஷெரிப், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மா. செல்லத்துரை, முத்துப்பாண்டி,சேக் தாவுது, ஆறுமுகச்சாமி, சேசு ராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் ரஹீம், ராஜேஸ்வரன்,சாமிதுரை, தமிழ்ச்செல்வி,ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம்,சீனித்துரை, திவான் ஒலி,ரவிசங்கர்,ஜெயக்குமார், மகேஷ் மாயவன்,சுரேஷ்,நகர செயலாளர்கள் சாதிர்,வெங்கடேசன், அப்பாஸ்,கணேசன், பேரூர் செயலாளர்கள் சுடலை, குட்டி என்ற சங்கர்,முத்தையா,பண்டாரம், முத்துராஜன், வெள்ளத்துரை,உசேன், சிதம்பரம், கோபால்,முன்னாள் ஒன்றிய செயலாளர் ராமையா,

தென்காசி ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா, கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான்,வழக்கறிஞர் வேலுச்சாமி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி கிருஷ்ணராஜா, பேச்சிமுத்து, தங்கராஜ் பாண்டியன், ரமேஷ்,முருகன்,கோமதிநாயகம், இஞ்சி இஸ்மாயில்,இசக்கி பாண்டியன்,அண்ணாமலை, கே.என்.எல்.சுப்பையா,சேக் முகமது, முத்துக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம்!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | - | ஈரோடு |
| 30.03.2024 (சனிக்கிழமை) | - | சேலம் |
| 02.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - | திருச்சி |
| 03.04.2024 (புதன் கிழமை) | - | சிதம்பரம் |
| 06.04.2024 (சனிக் கிழமை) | - | சென்னை, திருபெரும்புதூர் |
| 07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) | - | சென்னை |
| 10.04.2024 (புதன் கிழமை) | - | மதுரை |
| 11.04.2024 (வியாழக் கிழமை) | - | தூத்துக்குடி |
| 14.04.2024 (ஞாயிற்றுக் கிழமை) | - | திருப்பூர் |
| 15.04.2024 (திங்கட் கிழமை) | - | கோவை |
| 16.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - | பொள்ளாச்சி |

### தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும்

## கனிமொழி கருணாநிதி இன்று வேட்புமனுத் தாக்கல்!

### திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, மார்ச் 26-

‘இந்தியா’ கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று (26.03.2024) செவ்வாய்க்கிழமை வேட்புமனுத் தாக்கல் செய்கிறார். அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் திருமதி.பி.கீதாஜீவன் அறிக்கை ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

நடைபெற இருக்கின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க வேட்பாளராக கனிமொழி கருணாநிதி அவர்கள் தி.மு.கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளார்.

தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று (26.03.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை முன்பிருந்து புறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்ய இருக்கிறார்.

வேட்பு மனுத்தாக்கல் நிகழ்ச்சியில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சிவகங்கையில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார். உடன் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம், முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி., அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், எம்.எல்.ஏ.க்கள், திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



தென்காசி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தென்காசி,கடையநல்லூர் தொகுதி சார்பில் தென்காசி குற்றாலம் காசிமேஜர்புரம் ஸ்ரீ முருகன் மஹாலில் இந்தியா கூட்டணி அனைத்துக் கட்சி செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் அறிமுக கூட்டம் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று வேட்பாளரை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.உடன் சுந்தர மகாலிங்கம்,தனுசு எம் குமார் எம்.பி., பழனிநாடார் எம்.எல்.ஏ. கூட்டணி கட்சி நிர்வாகிகள் சலீம்,ஜான் தாமஸ், முத்துப்பாண்டியன்,இசக்கிதுரை,சுதா பாலசுப்பிரமணியன்,ராம உதயசூரியன், அப்துல்அஜீஸ்,யாக்கூப்,கலிவரதன்,கரு. வீரபாண்டியன், அய்யாசாமி உள்பட பலர் உள்ளனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, தேர்தல் பிரச்சாரம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 28.03.2024 (வியாழக் கிழமை) | - கரூர்<br>ஈரோடு |
| 29.03.2024 (வெள்ளிக்கிழமை) | - கோவை<br>பொள்ளாச்சி |
| 01.04.2024 (திங்கட் கிழமை) | - திருநெல்வேலி<br>தென்காசி |
| 02.04.2024 (செவ்வாய்க் கிழமை) | - கன்னியாகுமரி |
| 04.04.2024 (வியாழக் கிழமை) | - மதுரை<br>தேனி |
| 08.04.2024 (திங்கட் கிழமை) | - சென்னை தெற்கு |

**"அண்ணா அறிவாலயம்"**
'சென்னை-18.
நாள் : 24.3.2024.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## கறம்பக்குடி அருகே கோடை நடவுப்பணிகள் தீவிரம்!

கறம்பக்குடி, மார்ச் 26–

கறம்பக்குடி அருகே இயந்திரம் வாயிலாக கோடை நடவு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே அம்புக்கோவில் கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் அம்புக்கோவில் மற்றும் பிலாவிடுதி பகுதியை சேர்ந்த அம்புக்கோவில் கிராமத்தில் அமைந்துள்ள பெரிய எழும்பி முக்கூர்த்த நாறி போன்ற ஆயக்கட்டு பகுதிகளில் அமைந்துள்ள மற்றும் கூத்தம்பட்டி மற்றும் கூத்தம்பட்டி கிராம பகுதிகளில் அமைந்துள்ள பாசன விவசாய நில பரப்புகளில் வருடம் தோறும் குறுவை, சம்பா, கோடை பருவ காலங்களில் நடவு பணிகள் தீவிரம் அடைந்து வருவது வழக்கம்.

இந்த ஆண்டு கூத்தம்பட்டி அம்புக்கோவில் போன்ற பகுதிகளில் கடந்த சில தினங்களாக கோடை நடவு பணிகள் நடைபெற்று வருகின்றன விவசாயி செந்தில் மற்றும் அவரது சகோதரி மைத்துனர் மற்றும் ஏராளமான விவசாயிகளுக்கு உள்ள 5 ஏக்கர் பரப்பலவில் ஆள் பற்றாக்குறையின் காரணமாக இயந்திரம் மூலம் கோடை நடவு பணிகள் நடைபெற்று வருகின்றன. இது குறித்து விவசாயிகள் கூறும் போது ஆள்பற்றாக்குறையின் காரணமாக இயந்திரம் மூலம் கோடை நடவு பணிகளை மேற்கொண்டு வருகிறோம் என்று விவசாயிகள் ஓட்டு மொத்தமாக கூறினர்.



தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி வேட்பாளரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் (24.03.2024) தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சாரத்தைத் தொடங்கினார். தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் 'இந்தியா' கூட்டணிக் கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## கனிமொழி கருணாநிதி - நவாஸ்கனி ஆகியோரை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று தேர்தல் பிரச்சாரம்!

### எட்டையபுரம் - மதுரை நான்கு வழிச்சாலையில் உள்ள சிந்தலக்கரை மைதானத்தில் நடைபெறுகிறது!

தூத்துக்குடி, மார்ச் 26-

'இந்தியா' கூட்டணி சார்பில் தூத்துக்குடி, இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கனிமொழி கருணாநிதி, நவாஸ்கனி ஆகியோரை ஆதரித்து தி.மு.கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மாபெரும் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். எனவே அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று தூத்துக் குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அழைப்பு விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

நடைபெற இருக்கின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி சார்பில் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக கனிமொழி கருணாநிதி அவர்கள் உதயசூரியன் சின்னத்திலும், இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லீம்லீக் சார்பில் நவாஸ்கனி அவர்கள் ஏணி சின்னத்திலும் போட்டியிடுகிறார்கள்.

இவர்களை ஆதரித்து தி.மு.கழக தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (26.03.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 4.30 மணி அளவில் எட்டையபுரம் மதுரை நான்கு வழிச் சாலையில் அமைந்துள்ள சிந்தலக்கரை கலைஞர் மைதானத்தில் நடைபெறும் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றுகிறார்.

இந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்திற்கு தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று பெருந்திரளாகக் கலந்து கொள்ள அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


26
மார்ச்
2024



5ம் ஆண்டு நினைவஞ்சலி

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட
முன்னாள் செயலாளரும்,
பெரம்பலூர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்
முன்னாள் அமைச்சருமான

திருச்சி
Er. N. செல்வராஜ் B.E., MIE

நீங்கா நினைவுகளுடன்...

என்றும் உங்கள் நினைவில்

N.S. கலைராஜா B.E., MBA.,
NSK பில்டர்ஸ் (பி) லிமிடெட்

N.S. கருணைராஜா B.Tech., MBA.,
தலைமை செயற்குழு உறுப்பினர்,
திருச்சி வடக்கு மாவட்டம்



## 2024 நாடாளுமன்றத் தேர்தல் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**26-03-2024, செவ்வாய்க்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | காந்தி சிலை சந்திப்பு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 2 | காலை 10.45 மணி | பேருந்து நிலையம் அருகில், கூட்ரோடு, இறையூர், கலசப்பாக்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 3 | காலை 11.45 மணி | அம்பேத்கர் சிலை அருகில், செங்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 4 | மதியம் 12.30 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 5 | மாலை 5.00 மணி | ரயில்வே சந்திப்பு அருகில், கோடியூர், ஜோலார்ப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| 6 | மாலை 5.45 மணி | பேருந்து நிலையம் அருகில், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 7 | இரவு 6.30 மணி | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் சாலை, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 8 | இரவு 7.30 மணி | பேருந்து நிலையம் அருகில், போர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 9 | இரவு 8.15 மணி | பேருந்து நிலையம் அருகில், குடியாத்தம், வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 10 | இரவு 9.00 மணி | பிரதான சாலை, பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 11 | இரவு 9.30 மணி | மண்டித் தெரு, வேலூர், வேலூர் மாவட்டம். | வேலூர் |

**27-03-2024, புதன்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.

ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமை! சங்கரன் கோவில் - வாசுதேவ நல்லூர் தொகுதிக்குட்பட்ட

# 'இந்தியா' கூட்டணியின் கழக வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் அறிமுகக் கூட்டம்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் சிறப்புரை!

தென்காசி, மார்ச் 26 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சங்கரன்கோவில், வாசு தேவ நல்லூர் தொகுதிக்கு உட்பட்ட இந்தியா கூட் டணி தென்காசி நாடாளு மன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மருத் துவர் ராணி ஸ்ரீகுமார் அறி முக கூட்டம் சங்கரன்கோ வில் கலைஞர் திடல் முப்பிடாதி அம்மன் கோவில் முன்பு தென்காசி வடக்கு மாவட்டச் செய லாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்க வேலு, யு.எஸ்.டி. சீனி வாசன், பரமகுரு தொகுதி பார்வையாளர் கள் மாநில விவசாய அணி துணை செயலாளர் நல்ல சேதுபதி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, சதன் திருமலைகுமார் எம். எல்.ஏ.

மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்து செல்வி,மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண் பக விநாயகம், அவைத்த லைவர் பத்மநாதன்,

ம.தி.மு.க மாவட்ட செயலாளர் சுதா பாலசுப் பிரமணியன், சி.பி.எம். மாவட்டச் செயலாளர் முத்துப்பாண்டி, சி.பி.ஐ மாவட்டச் செயலாளர் இசக்கிதுரை,

வி.சி.க.லிங்கவளவன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பட்டாணி,த.மு.மு.க.

யாகூப், ஆதித்தமிழர் கட்சி ஆதவன், ஆதிதமிழர் பேரவை தென்னரசு,அகில இந்திய பார்வர்டு பிளாக் சுப்பிரமணியன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி கணே சன்,திராவிட தமிழர் கட்சி மகாலிங்கம்,தமிழ் புலிகள் சந்திரசேகர், மனிதநேய ஜனநாயகக் கட்சி அஜ் மீர், மக்கள் நீதி மையம் அய்யாசாமி, ஆகியோர் முன்னிலையில் நடைபெற் றது. நிகழ்ச்சியை நகர செய லாளர் மு.பிரகாஷ் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தென்காசி நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட் டணி கழக வெற்றி வேட் பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் பங் கேற்றனர்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் இரா மச்சந்திரன் பேசியதாவது.

கூட்டணிக் கட்சிகள் வெளியே போகாமல் இருக்கக்கூடிய ஒரே கட்சி நம் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான இந்தியா கூட்டணி. வருகிற நாடா ளுமன்றத் தேர்தலில் இந் தியா கூட்டணி அமோக வெற்றி பெறும்.பா.ஜ.க. அ.தி.மு.க. கூட்டணி வலு வில்லாமல் உள்ளது.

தினசரி ஒரு அறிக் கையை அவர்கள் விடுகி றார்கள்.

இன்று இருக்கிற அரசி யல் சூழ்நிலையில் எல்லோ ரையும் அழைத்து கூட் டணி கட்சி தலைவர்களை அரவணைத்து செல்லும் ஒரே தலைவர் நம் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மட்டுமே.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சி கள் அனைவருக்கும் அங்கீ காரம் கொடுத்து கூட்ட ணியை கட்டுக்கோப்பாக வைத்துள்ளார் நம் தளபதி அவர்கள்.தென்காசி நாடா ளுமன்றத் தொகுதியில் இந் தியா கூட்டணி கழக வேட் பாளர் ராணி ஸ்ரீகுமாரை 4 லட்சம் வாக்குகள் வித்தி யாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.அதற் காக கழகத்தினர்,

கூட்டணிக் கட்சி நிர்வா கிகள், தொண்டர்கள் அனைவரும் ஒருங்கி ணைந்து முழு வீச்சுடன் உதய சூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிக்க வேண் டும்.40க்கு 40 நாம் தான் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இரா மச்சந்திரன் பேசினார்.

முன்னதாக தென்காசி வடக்கு மாவட்டச் செய லாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பேசியதாவது.

கழக வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் குடும்பம் பாரம் பரியமிக்க கழக குடும்ப மா கும். நாடாளுமன்றத் தேர் தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் தி.மு.க.தேர்தல் அறிக்கை பொதுமக்களி டம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. முதலமைச்சர் கழக தலை வர் அவர்கள் சட்டமன்ற தேர்தலில் கொடுத்த 511 திட்டங்களில் 33 மாதங்க ளில் 90 சதவீதம் திட்டங் கள் நிறைவேற்றி யுள்ளார். தென்காசி நா டாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் ராணி ஸ்ரீகுமாரை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற நாம் அனை வரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசி னார்.

பின்னர் தென்காசி நாடாளுமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் பேசியதா வது.

இங்கு பேசிய கழக முன்னோடிகள் அனைவ ரும் கழகத்தில் எங்களது குடும்பம் எவ்வாறு ஈடுபட் டுள்ளது என்று தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.

உங்களுக்கு உழைத்திட கழகத் தலைவர் முதல மைச்சர் அவர்கள் எனக்கு வாய்ப்பு கொடுத்துள்ளார் கள்.நீங்கள் உதய சூரியன் சின்னத்தில் எனக்கு வாக்க ளித்து அதிக வாக்கு வித்தி யாசம் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

நாடும் நமதே 40ம் நமதே.

இவ்வாறு அவர் பேசி னார்.

நிகழ்வில் மாவட்ட பொருளாளர் சரவணன், துணைச் செயலாளர் புனிதா, ராஜதுரை,மனோ கரன்,ஒன்றிய செயலாளர் கள் லாலா சங்கர பாண்டி யன்,கடற்கரை,கிறிஸ்டோ பர், பொன்.முத்தையா பாண்டியன்,பூசை பாண்டி யன்,சேர்மத்துரை,பெரிய துரை, வெள்ளத்துரை, ராமச்சந்திரன், அன்பழ கன்,பால்ராஜ்,நகர செய லாளர் புளியங்குடி அந் தோணிசாமி,பேரூர் கழக செயலாளர்கள் மாரி முத்து,ரூபி. பாலசுப்பிரம ணியன்,கே..டி.சி.

குருசாமி, சேது சுப்பிர மணியன், நகர்மன்ற தலை வர்கள் உமா மகேஸ்வரிசர வணன் (சங்கரன்கோவில்) விஜயா(புளியங்குடி)

துணைச் செயலாளர் கள் மாரியப்பன், முத்து க் குமார்,சுப்புதாய்,பொரு ளாளர் லாசர்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி முகேஷ், வழக்கறிஞர் அணி பிச் சையா, மாணவரணி உதய குமார்,மகளிர் அணி சிவ சங்கரி, சிறுபான்மையின ரணி நாகூர் கனி, பொறி யாளர் அணி பசுபதி பாண் டியன், மருத்துவர் அணி டாக்டர் மணிகண்டன், தகவல் தொழில்நுட்ப அணி கிப்சன் விவசாய அணி துணைத் தலைவர் மாடசாமி, மாவட்டப் பிர திநிதி செய்யதுஅலி,டைட் டஸ்,மகளிர் அணி அன்பு மணி கணேசன், அண்ணா மலை,

வழக்கறிஞர்கள் கண் ணன், முத்துராமலிங்கம், ஜெயக்குமார், சதீஷ், தொ.மு.ச.மைக்கேல் நெல் சன்,சங்கர், ராஜ்,திட்டச் செயலாளர் மகாராஜன் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சரவ ணன்,கார்த்தி, ராஜ்,அன் சாரி,ராஜராஜன்,மணி கண்டன்,

முன்னாள் யூனியன் தலைவர் பாலசுப்பிரமணி யன்,கழக மூத்த முன் னோடி சங்கரதாஸ் உள் பட கழகத்தினர், கூட்ட ணிக் கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அவர்கள் மதுரை மாநகர் மாவட்டம் 51 ஆவது வட்டக் கழகச் செயலாளர் ஏ.ஜெ. அசோக்குமாரின் தந்தை மறைந்த ஏ.ஜெயராமன் இல்லத்திற்குச் சென்று அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். அதுபோது என்.மணிவண்ணன், என்.மணிமாறன், ஏ.ஆர்.சி.ராஜ்குமார், ஏ.ஆர்.சி.ஆண்டியப்பன், ஏ.ராஜசேகரன், என். சதீஷ்குமார் உள்ளிட்ட குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## அறமே உருவாம் முதல்வரின் முழக்கம்

# நாற்பதும் நமதே! நமதே! சூளுரை வெல்க!!



தமிழரே! தமிழரே! தலைவர்நம் முதல்வரின்
தன்மான வெற்றிசூழ் சங்கொலி நாதமே!
இமிழ்கடல் முழக்காய் எதிரொலித் திடுகவே!
ஏற்றொலி **நாற்பதே இடங்களும் நமதே! நமதே!** (தமிழரே)

அறமுடை யாளர்கள் அடங்கிக் கிடப்பதோ?
அறிவுளார் அறியாமை அகற்றா திருப்பதோ?
திறமுடை யாளர்தாம் தெளிவின்றி நடப்பதோ?
தேர்தலித் தேர்தலில் சூளுரைத் தெழுகவே! (தமிழரே)

பொய்மைப் புரட்டல்கள் குதூகல ஆட்டமோ?
கோடிகோ டிப்பணச் சொத்துகள் தேட்டமோ?
மெய்மைசூழ் மக்களே! உம்மனம் கொதிக்காதோ?
தலைகீழாய் மாற்றுக! துயர்ஆட்சி நீக்குக! (தமிழரே)

'ஒரேஒரே' என்றுநம் உரிமைகளைப் பறிப்பதோ!
'ஊழல்ஊழல்' என்றுதம் ஊழலை மறைப்பதோ!
திராவிடநம் மாண்பாட்சியைச் சிறுமைவெறி வெல்லவோ!
அடாதுசெய் ஆட்சிக்கே அடங்கியேநாம் தாழ்வதோ? (தமிழரே)

மக்களின் வெறுப்பாட்சி ஒன்றியத்தை ஆள்வதோ?
மாபெரும் சொத்தூழல் மறுபடியும் வெல்வதோ?
எக்களிக்கும் கொடுங்கோன்மை சுக்குநூறாய்ப் போகவே
**இதயஉதய சூரியனில் பதியவேவாக் களிப்பீரே!** (தமிழரே)


ஆளுக்கொரு திசைபார்த்தே ஆகாயம் குதிக்கிறார்
அறம்நீதித் தமிழ்நாட்டை ஆளுநரால் வதைக்கிறார்
தோளுக்குத் துணையாகும் தோழமையைச் சிகைக்கிறார்
சுதந்தீரம்தந்த **குடி'நேரு:** தொண்டினையே மறைக்கிறார் (தமிழரே)

அடக்குமுறை கட்டவிழ்த்தே ஆணவமும் சிரிப்பதோ?
அநீதியாக நீதிதன்னை அடக்கிடவே நினைப்பதோ?
விடவிதைகள் அமுதமன்றே வீதிதோறும் விதைப்பதோ?
வியன்தமிழ்எம் மக்களேநீர் விழிப்புணர்வு கொள்வீரே! (தமிழரே)

சட்டதிட்டம் காப்போரே சட்டமொழுங்கு மீறவோ?
சாதிமதத்தின் சார்பின்மை தனைஎள்ளி நகைப்பதோ?
கொட்டிமுழக்கும் தளபதியார் கொள்கைவெற்றி சூழட்டும்!
கோடிகோடி ஒன்றியத்தின் நாட்டுமக்கள் வாழட்டும்! (தமிழரே)

பாடுபடும் ஏழைகளின் பாங்காளர் முதல்வரே
பைந்தமிழர் பேருழைப்புப் பரிதியும்நம் முதல்வரே
ஈடுஇணை இல்லாத நாடுதமிழ்த் தலைவரே!
எடுத்தூதே வெற்றிசங்கே! இமயமலை அதிரட்டும்! (தமிழரே)

முத்தமிழ்க் **கலைஞானி மகன்இஸ்டாலின்** முற்போக்குக் கூட்டணி
முதுதமிழ்நம் நாட்டினிலே முழுமையாக வெல்லட்டும்
ஒத்துரிமை மக்களாட்சி ஒன்றியத்தில் பூக்கட்டும்
விடிவுதமிழ் இனம்பெற்றே இந்தியத்தை ஆளட்டும் ! (தமிழரே)



– பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
உலக அமைப்பாளர்,
பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்

# அமலாக்கத்துறையும், அடக்குமுறையும்! சீரழியும் மக்களாட்சி விழுமியங்கள்!

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கர் அதனை நடைமுறைப்படுத்துவதில்தான் அதன் உயிர் இருக்கிறது என்று கூறினார். எந்த சட்டமுமே அதை தவறாகப் பயன்படுத்துபவர்களால் ஒரு மோசமான ஆயுதமாக மாற்றப்பட முடியும். அதிலும் கடுமையான குற்றங்களைத் தடுப்பதற்காக உருவாக்கப்படும் கடுமையான சட்டங்கள் ஒரு எதேச்சதிகார ஆட்சியின் கையில் மோசமான ஆயுதமாக மாறிவிடும்!

**சென்ற வாரம் தலைநகர் டெல்லியில் அதன் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டது நாடெங்கும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது. ஆட்சியில் இருக்கும் மாநில முதல்வரை கைது செய்யுமளவு என்ன தீவிரமான ஒரு குற்றத்தை அவர் செய்துள்ளார் என்பது முதல் கேள்வி.**

அதிலும் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நேரத்தில் டெல்லி, பஞ்சாப் ஆகிய இரு மாநிலங்களில் ஆட்சியிலுள்ள ஆம் ஆத்மி கட்சி, ஒன்றிய அரசில் ஆளும் கட்சியான பா.ஜ.க. கட்சிக்கு எதிரான கூட்டணியில் இடம் பெற்று தேர்தலைச் சந்திக்கவுள்ள நேரத்தில் அதன் தலைவரான அரவிந்த் கேஜ்ரிவாலை அவசரமாக கைது செய்ய வேண்டிய தேவை என்ன என்பதே அந்தக் கேள்வியின் முழு வடிவம்.

**அரசியல் உள்நோக்கம் காரணமாகவே பா.ஜ.க. அரசு அமலாக்கத்துறையைப் பயன்படுத்தி இந்த கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்பதே அரசியல் நோக்கர்கள், சிந்தனையாளர்கள், எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டாக உள்ளது. இதனை நாம் விரிவாக புரிந்துகொள்ள வேண்டும்.**

**மதுபான விற்பனைக் கொள்கை: வழக்கின் முன் வரலாறு!**



டெல்லியில் மதுபான விற்பனையை முறைப்படுத்த ஆம் ஆத்மி அரசு ஒரு புதிய சட்டத்தை 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிமுகப்படுத்தியது. ஆளுநர் சக்சேனாவும் இதற்கு ஒப்புதல் அளித்தார். எதிர்க்கட்சிகள் ஆம் ஆத்மி அரசு டெல்லியில் மதுபானத்தை அளவுக்கதிகமாக ஊக்குவிப்பதாக குற்றம் சாட்டியதால் 2022 ஜூலை மாதம் அந்தச் சட்டம் திரும்பப் பெறப்பட்டது.

அதற்கு அடுத்த மாதம் இந்தச் சட்டத்தை உருவாக்கியதிலும், அமல்படுத்தியதிலும் பல முறைகேடுகள் நடந்திருப்பதாக சி.பி.ஐ., துணை முதல்வர் மனிஷ் சிசோதியா உட்பட பதினைந்து பேர் மீது வழக்குப் பதிவு செய்தது.

பல கட்ட விசாரணைகளுக்குப் பிறகு சி.பி.ஐ. 2023 பிப்ரவரி மாதம் மனிஷ் சிசோதியாவை கைது செய்தது. மார்ச் மாதம் அமலாக்கத்துறை அவரை மீண்டும் கைது செய்தது. மே மாதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

மனிஷ் சிசோதியாவுடன் சத்யேந்திர ஜெயின் என்ற மற்றோர் அமைச்சரும் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ந்து அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்து வருகிறது. அதனால் இரண்டு அமைச்சர்களுக்கும் பிணை மறுக்கப்பட்டு வருகிறது.

**கடந்த அக்டோபர் மாதம், மனிஷ் சிசோதியா எட்டு மாதங்கள் சிறையில் கழித்து விட்ட நிலையில் பிணை கோரி உச்ச நீதிமன்றத்தை நாடினார். அப்போது நீதிபதி கண்ணா அமலாக்கத்துறையை நோக்கி பல கேள்விகளை எழுப்பினார். மனிஷ் சிசோதியாவை குற்றம்சாட்ட வலுவான ஆதாரங்கள் உள்ளனவா என்று கேட்டார்.**



**மதுபான மொத்த விற்பனையாளர்கள் கொடுத்த பணம் ஆம் ஆத்மி கட்சியின் கோவா தேர்தல் செலவுக்குப் பயன்பட்டது என்பதை எப்படி நிரூபிப்பீர்கள் என்று கேட்டார். அப்படிச் செய்திருந்தால் கட்சி குற்றவாளியா, மனிஷ் சிசோதியா குற்றவாளியா என்றும் கேட்டார்.**

இப்படியெல்லாம் பல ஐயங்களை ஏற்படுத்தினாலும் மனிஷ் சிசோதியாவுக்கு பிணை வழங்கப்படவில்லை. ஆறு மாதங்களுக்குள் வழக்கை நடத்தி முடிப்பதாகவும், அதற்கு மேல் தாமதமானால் மனிஷ் சிசோதியா மீண்டும் பிணை கோரலாம் என்றும் அமலாக்கத்துறை உறுதியளித்தது. அதன் பின் ஆறு மாதங்கள் கடந்து விட்டன. எந்த வழக்கும் நடக்கவில்லை; குற்றச்சாட்டும் நிரூபிக்கப்பட வில்லை.



**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*

**அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு சம்மன்!**

ஓராண்டாக பிணை வழங்கப்படாமல் சிறையில் உள்ள முன்னாள் துணை முதல்வர் மனிஷ் சிசோதியாவுக்கு எதிராக சாட்சியங்களைச் சமர்ப்பித்து வழக்கில் தண்டனை வாங்கித் தரவில்லை அமலாக்கத்துறை. ஆனால், அதே வழக்கில் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலை விசாரிக்க வேண்டும் என்று சம்மன் அனுப்பியது.

அரவிந்த் கெஜ்ரிவால் வழக்கு ஏற்கனவே நிலுவையில் இருப்பதால்தான் விசாரணைக்கு வர முடியாது என்று கூறி விட்டார். அவர் முதலில் குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்படவில்லை. மனிஷ் சிசோதியா ஆதாரங்களைக் கலைத்துவிடுவார் என்று கூறித்தான் பிணையின்றி ஓராண்டாக சிறையில் உள்ளார். கையூட்டாகப் பெற்ற பணம் கட்சி தேர்தலில் செலவழித்தது என்றால் அரவிந்த் கேஜ்ரிவால் அந்த ஆதாரங்களை அழிக்க மாட்டாரா, கலைக்க மாட்டாரா? அப்படியானால் ஒட்டு மொத்தமாக கட்சிக்காரர்கள் அனைவரையும் ஆதாரங்கள் கிடைக்கும் வரை சிறையில் அடைத்து விடுவார்களா?

**அப்ரூவர் சரத் ரெட்டி அம்பலமான கதை!**

அரபிந்தோ ஃபார்மா என்ற நிறுவனத்தின் இயக்




குநரான சரத் ரெட்டி என்பவர் 2022ஆம் ஆண்டு இதே மதுபான முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டார். 2023 ஜூலை மாதம் அப்ரூவராக மாறினார். அவர் ஒட்டுமொத்த ஊழல்/முறைகேட்டை விளக்குவார் என்பதால் அவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்று முறையிட்டது அமலாக்கத்துறை. அதன்படியே அவர் விடுவிக்கப்பட்டார். அவர் ஆம் ஆத்மி கட்சிக்குக் கொடுத்த நூறு கோடி ரூபாய் கோவா தேர்தலில் பயன்படுத்தப்பட்டது என்பதுதான் வழக்கு.

**கடந்த வாரம் தேர்தல் பத்திரங்கள் குறித்த முழு விவரங்களும் வெளியானபோதுதான் ஒரு திடுக்கிடும் தகவல் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அது என்னவென்றால் அவர் கைதான உடன் ஐந்து கோடி ரூபாய்க்கான தேர்தல் பத்திரங்களை வாங்கி அவர் பா.ஜ.க.வுக்கு அளித்துள்ளார் என்பதுதான் அது. அது மட்டுமன்றி, அவர் மொத்தத்தில் 55 கோடி ரூபாய் பா.ஜ.க.வுக்கு நன்கொடையாக தேர்தல் பத்திரங்கள் மூலம் கொடுத்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.**

**ஆம் ஆத்மி கட்சிக்கு அவர் நூறு கோடி ரூபாய் கொடுத்தார் என்றே வைத்துக்கொண்டாலும், அது கோவா தேர்தலில் பயன்படுத்தப்பட்டது என்றே வைத்துக்கொண்டாலும், அது ஊழல் என்றால், கைது செய்யப்பட்ட ஒரு நபர் பா.ஜ.க. கட்சிக்குத் தேர்தல் பத்திரம் மூலம் நன்கொடை தருவது மட்டும் ஊழல் இல்லையா என்று கேட்கிறார்கள் ஆம் ஆத்மி கட்சியினர். அமைச்சர் ஆதிஷி பா.ஜ.க. தலைவர் நட்டா கைது செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.**

சரத் ரெட்டி மட்டுமல்லாமல், அமலாக்கத்துறை சோதனைக்கு உள்ளான பலரும், தேர்தல் பத்திரங்கள் மூலம் பா.ஜ.க.வுக்கு நன்கொடை கொடுத்துள்ளது அம்பலமாகியுள்ளது. இந்த விவரங்கள் தேர்தல் நேரத்தில் வெளிவந்து விடக் கூடாது என்றுதான் ஸ்டேட் பேங்க் ஆறு மாதங்கள் அவகாசம் கேட்டது. உச்ச நீதிமன்றம் கறாராக மறுத்துவிட்டதால் வேறு வழியில்லாமல் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமலாக்கத்துறை என்பதை ஆங்கிலத்தில் சுருக்கமாக ED என்று குறிப்பிடுகிறோம். அதன் விரிவு Enforcement Directorate என்பதாகும். அதாவது சட்டத்தை அமல்படுத்தும் துறை. அது இவ்வாறு ஒன்றிய ஆளும் கட்சி பா.ஜ.க.வுக்கு தேர்தல் நிதி வசூலிக்க உதவுவது போல இயங்குவதால் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அதனை Extortion Directorate, அதாவது பணம் தண்டால் வாங்கும் துறை என்று அழைத்துள்ளார்.

**டி.ஆர்.எஸ் தலைவர் மகள் கவிதாவும் கைதானார்!**

ஆம் ஆத்மிக்கு நூறு கோடி ரூபாய் பணம் கொடுக்கப்பட்ட வழக்கில் தெலங்கானா ராஷ்டிர சமிதியின் தலைவர் சந்திரசேகர ராவின் மகள் கவிதாவும் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் ஆம் ஆத்மி தலைவர்களுடன் சேர்ந்து சதி செய்து, மதுபான கம்பெனிகளிடமிருந்து பணம் பெற்றுத் தருவதில் இடைத்தரகராகச் செயல்பட்டதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இப்படி முக்கியமான எதிர்க்கட்சி தலைவர்களையெல்லாம் கைது செய்ய போதிய ஆதாரம் இருக்கிறதா என்பது முக்கியமான கேள்வி. அப்படி ஆதாரம் இருந்தால் ஒரு வருடமாக சிறையில் இருக்கும் மனிஷ் சிசோதியா மற்றும் அவருடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு முதலில் தண்டனை வாங்கித் தரலாமே என்றுதான் பார்வையாளர்கள் கேட்கின்றனர்.


அமலாக்கத்துறை ஒரு தொழிலதிபரை கைது செய்து, அவரிடமிருந்து பா.ஜ.க. கட்சிக்கு தேர்தல் நன்கொடை கிடைத்தவுடன், அவரை அப்ரூவராக அறிவித்து விடுவித்துவிட்டது என்றால், அவர் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டும் எப்படி இத்தனை பேரை தண்டிக்க முடியும் என்ற ஐயம் ஏற்படுகிறது.

**எதிர்க்கட்சிகளை முடக்கும் தந்திரமா?**

மக்களாட்சியின் உயிர்மூச்சே தேர்தல்கள்தான். தேர்தலில் தங்களுக்கு சவாலாக உள்ள எதிர்க்கட்சியினர் மீது விசாரணை அமைப்புகளை ஏவுவது, அவர்களை கைது செய்வது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவர்களை தேர்தலில் ஆளும்கட்சிக்கு எதிராக பிரச்சாரம் செய்ய முடியாமல் தடுக்கிறார்களா என்ற கேள்வி தவிர்க்க முடியாதது.

விசாரணைக் கைதிகளாக பிணையின்றி சிறையில் வைக்கப்படும் பலர், பின்னர் குற்றம் நிரூபிக்கப்படாமல் விடுதலையாகும்போது அவர்கள் சிறையில் கழித்த காலத்துக்கு எந்த நஷ்டஈடும் வழங்கப்படுவதில்லை. அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருந்தால், அவர்கள் தங்கள் அரசியல் கடமையைச் செய்வதிலிருந்து தேவையின்றி தடுக்கப்படுகிறார்கள். மக்களின் வாக்குகளுக்குப் பொருளின்றிப் போகிறது.

**மக்களாட்சி என்பது மக்களின் ஆட்சியும், சட்டத்தின் ஆட்சியுமாகும். ஆனால், சட்டத்தின் பெயரால் மக்களின் பிரதிநிதிகளை முடக்குவதற்கு போதிய**



**ஆதாரமும், நியாயமும் வேண்டும். விசாரணை என்ற பெயரில் ஒரு துணை முதல்வரை, மக்கள் பிரதிநிதியை ஓராண்டுக் காலம் சிறையில் வைத்திருக்கிறது அமலாக்கத்துறை. உச்ச நீதிமன்றமே அவர் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியுமா என்று ஐயம் தெரிவித்துள்ளது.**

**அப்படி இருக்கையில் துணை முதல்வரும், அமைச்சர்களும், அதிகாரிகளும் ஏற்கனவே சிறையில் உள்ள நிலையில் முதலமைச்சரையும் கைது செய்ய வேண்டிய தேவை எப்படி ஏற்படுகிறது என்பது பெரும் புதிராக உள்ளது.**

அப்படியே அரவிந்த் கெஜ்ரிவால் மீது ஐயம் இருந்தாலும், இரண்டு மாதங்களில் தேர்தல் முடிந்த பிறகு அவரை விசாரிக்க முடியாதா, கைது செய்ய முடியாதா என்பதையும் சிந்திக்க வேண்டும். குற்றம் நடந்ததாகச் சொல்லப்படுவது இரண்டாண்டுகளுக்கு முன்பு. இத்தனை நாள் கைது செய்யாமல் இருந்தவர்கள் மேலும் இரண்டு மாதங்கள் காத்திருந்தால் என்ன பெரிய இழப்பு ஏற்பட்டு விடும்?

ஒருபுறம் பா.ஜ.க. 400 தொகுதிகளில் வெல்வோம் என்று அறுதியிட்டுக் கூறுகிறது. அது உண்



மையானால் ஏன் எதிர்க்கட்சித் தலைவர்களை தேர்தல் நேரத்தில் விசாரணை அமைப்புகள் மூலம் வேட்டையாட வேண்டும்? ஊடகவியலாளர் ராஜ்தீப் சர்தேசாயும் அதைத்தான் கேட்கிறார்.

ஒருவேளை தோற்றுவிடுவோம் என்ற அச்சத்தில்தான் இதையெல்லாம் செய்கிறதோ பா.ஜ.க. என்ற கேள்வியும் தவிர்க்க முடியாமல் எழுகிறது. மேற்கு வங்கத்தில் அதை வன்மையாக எதிர்த்துப் பேசும் மஹூவா மொய்த்ரா வீட்டில் சி.பி.ஐ மூலம் சோதனையிடுகிறது.

குற்றச்சாட்டுகள் எதுவாக இருந்தாலும், தேர்தல் நேரத்தில் விசாரணை அமைப்புகள் மூலம் எதிர்க்கட்சிகளை முடக்க நினைப்பது மக்களாட்சி படுகொலை என்றே கூற முடியும். இது போன்ற செயல்கள் தொடர்ந்தால் இந்தியக் கூட்டாட்சி குடியரசு பெரும் சீர்குலைவையே சந்திக்கும்.

அரும்பாடுபட்டு உருவாக்கியுள்ள மாபெரும் மக்களாட்சிக் குடியர சினை தனது குறுகிய நலன்களுக்காக பா.ஜ.க. பாழ்படுத்தி விடக்கூடாது! அரவிந்த் கெஜ்ரிவாலை விடுதலை செய்வதுடன் தேர்தல் நேரத்தில் எதிர்க்கட்சியினர் செயல்பாடுகளை முடக்கும் எல்லா நடவடிக்கைகளையும் கைவிட வேண்டும்!

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்




தென்காசி நாடாளுமன்றத் தொகுதி தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட ‘இந்தியா’ கூட்டணி சார்பில் தென்காசி நாடாளுமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணிஸ்ரீ குமார் அறிமுகக் கூட்டம் சங்கரன் கோவில் கலைஞர் திடல் முப்பிடாதியம்மன் கோவில் முன்பு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை நகரச் செயலாளர் பிரகாஷ் தொகுத்து வழங்கினார்.இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று வேட்பாளரை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.உடன் தொகுதி பார்வையாளர்கள் நல்லசேதுபதி, இன்பா ஏ.என்.ரகு, ச.தங்கவேலு, சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ., கூட்டணி கட்சி நிர்வாகிகள் முத்துப்பாண்டி,சுதா, பட்டாணி, யாகூப், அஜ்மீர், லிங்கவளவன், ஆதவன் உள்பட பலர் உள்ளனர்.



தேனி நாடாளுமன்ற கழக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனை ஆதரித்து கழக தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேனியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள வருகை தருவதை முன்னிட்டு, பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தினை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., ஆகியோர் ஆய்வு செய்தனர். இதில் சரவணகுமார் எம்.எல்.ஏ., மகாராஜன் எம்.எல்.ஏ., பெரியகுளம் தொகுதி பார்வையாளர் பொன்ராஜ், போடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், மாவட்ட அவைத் தலைவர் செல்லப்பாண்டி, வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப் கான் மற்றும் கழக முன்னோடிகள் உடன் உள்ளனர்.

# பா.ஜ.க. ஊழல் பேர்வழிகளை ரெய்டு நடத்தி கைது செய்யுமா அமலாக்கப்பிரிவு?

**மனோ.தங்கராஜ்,** தமிழ்நாடு அமைச்சர்

எதிர்க்கட்சிகளை தேடித்தேடி கைது செய்யும் பா.ஜ.க. அரசின் அமலாக்கத்துறை (ED), ஊழலின் ஊற்றுக்கண்ணான பா.ஜ.க.வைச் சார்ந்த ஒருவரைக் கூட கைது செய்யாதது ஏன்?




**2019**இல் எடியூரப்பாவிடம் கைப்பற்றப்பட்ட முக்கிய ஆவணங்களில் அருண் ஜெட்லி, ராஜ்நாத் சிங், நிதின் கட்காரி, அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, பா.ஜ.க. மத்திய அலுவலக கணக்கு என பலருடன் 1800 கோடி ரூபாய் மதிப்பிலான பணப்பரிமாற்றம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டிருந்ததே, எடியூரப்பாவை அமலாக்கப் பிரிவு ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**கு**ஜராத்தில் மோடி ஆட்சியில் ரூ.750 கோடி ஊழலில் ஈடுபட்ட அமைச்சர் விபுல் சௌத்ரியை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**ப**ல கோடி டெண்டர் ஊழல் வழக்கில் ஈடுபட்ட கர்நாடக பாஜக அமைச்சர் நேரு ஓலேகரை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**40** பேர் பலி மற்றும் பல கோடி ஊழல் நடைபெற்ற மத்தியப் பிரதேச வியாபம் முறைகேட்டில் ஈடுபட்ட பா.ஜ.க. அமைச்சர் லக்ஷ்மிகாந்த் ஷர்மாவை 2019ல் சி.பி.ஐ நீதிமன்றம் விடுவித்தது. பின்பு கொரோனாவால் மரணமடைந்தார். முறைகேடு நடந்ததை நாடே அறியும். இந்த பணபரிமாற்றத்தை அமலாக்கப்பிரிவு விசாரிக்காதது ஏன்?




**எ**டியூரப்பா கொரோனா நேரத்தில் ரூ.40 ஆயிரம் கோடி ஊழல் செய்துள்ளதாக பா.ஜ.க. எம். எல்.ஏ. பாசன கவுடா குற்றஞ்சாட்டி னாரே, அதை அமலாக்கப்பிரிவு ரெய்டு நடத்தி, அவரை கைது செய்யாதது ஏன்?




**2001**-ல் பாதுகாப்பு துறை தளவாடங்கள் வாங்குவதில் நடைபெற்ற ஊழலில் தொடர்புடைய பா.ஜ.க. தலைவர் பங்காரு லட்சுமணனை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**பெ**ங்களூரு மெகாசிட்டி ஊழலில் ஈடுபட்ட கர்நாடக பா.ஜ.க. அமைச்சர் யோகேஷ்வரை ரெய்டு நடத்தி அவரை கைது செய்யாதது ஏன்?




**மோ**டி அமைச்சரவையில், குஜராத்தில் ரூ.400 கோடி மீன்வள ஒப்பந்த ஊழல் வழக்கில் ஈடுபட்ட அமைச்சர்கள் பர்ஷோத்தம் சோலங்கி & திலீப் சங்கனியை ரெய்டு நடத்தி அவர்களை கைது செய்யாதது ஏன்?




**ரூ.**103 கோடி வங்கி மோசடி வழக்கில் தொடர்புடைய மகாராஷ்டிரா பா.ஜ.க. தலைவர் மோகித் கம்போஜ்ஜை ரெய்டு நடத்தி அவரை கைது செய்யாதது ஏன்?




**ரூ.**18 கோடி சட்ட விரோத பண பரிமாற்றத்தில் ஈடுபட்ட கர்நாடக பா.ஜ.க. அமைச்சர் ஜனார்தனன் ரெட்டியை ரெய்டு நடத்தி அவரை கைது செய்யாதது ஏன்?




**ரூ.**2438 கோடி ஆருத்ரா நிதி மோசடி வழக்கில் ஈடுபட்ட பா.ஜ.க. நிர்வாகிகள் ஹரீஷ் மற்றும் ஆர்.கே. சுரேஷை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**ரூ.**5000 கோடி நியோ மேக்ஸ் நிதி மோசடியில் ஈடுபட்ட மதுரை பா.ஜ.க. பிரமுகர் வீர சக்தியை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**வி**க்ராந்த் போர்க் கப்பல் பெயரில் ரூ.57 கோடி பண மோசடியில் ஈடுபட்ட மகாராஷ்டிரா பாஜக தலைவர் கிரித் சோமயாவை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**வா**ஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. அமைச்சரவையில் மத்திய அமைச்சராக இருந்த திலீப் ரேய், ஜார்க்கண்ட் நிலக்கரி ஊழல் வழக்கில் பல கோடி மோசடியில் ஈடுபட்டாரே அம லாக்கப் பிரிவு ரெய்டு நடத்தி அவரை கைது செய்யாதது ஏன்?




**1** கி.மீ. சாலை அமைக்க ரூ.250 கோடி; சுங்கச்சாவடி ஊழல் ரூ.137 கோடி; ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் ரூ.22.44 கோடி ஊழல் இதில் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர் களை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?




**ம**த்திய உள்துறை அமைச்சகம் ஊழலில் முதலிடம் பிடித்துள்ளதே. இதில் மத்திய அமைச்சருக்கு தொடர்பு இருக்கிறதா இல்லையா என்பதை ரெய்டு நடத்தி விசாரிக்காதது ஏன்?




**ரூ.** 526 கோடிக்கு வாங்க இருந்த ரபேல் விமானத்தை மோடி அரசு ரூ. 1,670 கோடிக்கு வாங்கியதே இதில் முறை கேட்டில் ஈடுபட்ட பா.ஜ.க. அமைச்சர் களை அமலாக்கப் பிரிவு ரெய்டு நடத்தி விசாரிக்காதது ஏன்?




**ரூ.**1.37 கோடி ஊழல் வழக்கில் ஈடுபட்ட மிசோரம் பா.ஜ.க. எம்.எல்.ஏ. புத்ததான் சக்மாவை ரெய்டு நடத்தி கைது செய்யாதது ஏன்?

**எதிர்க்கட்சி முதலமைச்சர்களான ஹேமந்த் சோரன், அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்ட பலரையும் அமலாக்கத் துறை மற்றும் மத்திய முகமைகளை ஏவி சோதனைக்குள்ளாக்கி சிறையில் அடைத்துள்ளது மோடி அரசு. ஆனால் பா.ஜ.க.வில் உள்ள ஊழல் பேர்வழிகளையும் பா.ஜ.க.வில் இணைந்து கொண்ட ஊழல் பேர்வழிகளையும் அரிச்சந்திரன்கள் போல நடத்துகிறது மோடி அரசு.**

நன்றி:- **தீக்கதிர் 25-03-2024**



திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில், 'இந்தியா' கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் சச்சிதானந்தம் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.ந.பூங்கொடியிடம் வேட்பு மனுதாக்கல் செய்தார். உடன் கழகத் துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ.பெரியசாமி, அமைச்சர் அர.சக்கரபாணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன், கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.



சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதியில் 'இண்டியா' கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி ப.சிதம்பரம் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான திருமதி ஆஷாஅஜித்திடம் வேட்புமனுதாக்கல் செய்தார். உடன் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர் நவாஸ் கனி ( இந்திய யூனியன் முஸ்லிம் லீக்), ஆட்சியர் விஷ்ணு சந்திரனிடம் வேட்பு மனுத்தாக்கல் செய்தார். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் முருகேசன், ராம.கருமாணிக்கம் உடனிருந்தனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மதுரை நாடாளுமன்றத் தொகுதியில் 'இந்தியா' கூட்டணி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சு.வெங்கடேசன், மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிக வரித் துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் தேர்தல் அலுவலர் சங்கீதாவிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.



விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் மாணிக் தாகூர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலனிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். இதில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மு.மணிமாறன், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சாத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் ரெகுராமன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அசோகன், விருதுநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராஜா சொக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தேனி நாடாளுமன்றத் தொகுதியில் கொளுத்தும் வெயிலில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் உரை கேட்கத் திரண்ட மக்கள் வெள்ளம்!















கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சுட்டெரித்த வெயிலில், இந்தியா கூட்டணியின் தேனி தொகுதி கழக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு – தேனி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, தேனி, பெரியகுளம் ஆகிய இடங்களில் திரண்டிருந்த பல்லாயிரவர் மத்தியில், கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து, வாக்குகள் சேகரித்து உரையாற்றிய காட்சிகள்!

## திராவிட இயக்க இதழ்கள் - தென்னகத் தலைவன்!



திராவிட இயக்க எழுத்தாளர்களில் ஒருவரான தினகரன் எனும் ‘கயல்’ தினகரன் அவர்களால் 1962- இல் தொடங்கி நடத்தப்பட்ட இதழ், ‘தென்னகத் தலைவன்’. அதற்கு அவர்தான் ஆசிரியராக இருந்தார்.

‘தி.மு.கழக வார ஏடு’ என்ற அறிவிப்புடன் வெளிவந்த இந்த இதழின் முதல் இதழை, பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்டார்.

இந்த இதழுக்குத் தனியே அட்டைப் படம் இல்லை. இதழின் முகப்பிலேயே கட்டுரைகள் பிரசுரமாகி இருக்கின்றன. இதழின் தலைப்பில் அண்ணாவின் கோட்டோவியம் அமைந்திருந்தது. மேலும், ‘தம்பி! உள்ள உயிர் ஒன்றுதான். அது போகப் போவதும் ஒரு தடவைதான். அது விடுதலைப் பணிக்குப் போவதிலேதான் நான் பெருமைப்படுகிறேன்’ என்ற அண்ணாவின் கூற்று இடம்பெற்றுள்ளது. திராவிட இயக்கச் சிந்தனைகளைப் பறைசாற்றும் படைப்புகள், தலையங்கம், இலக்கியக் கட்டுரைகள், வெண்பா போட்டி, கேள்வி பதில் உள்ளிட்ட பல விஷயங்களைத் தாங்கி வந்தது இந்த இதழ்.

இந்த இதழைத்தான் பின்னாளில், கே.ஏ.மதியழகன் அவர்கள் பெற்று, முதலில் வார ஏடாகவும், பிறகு நாளேடாகவும் நடத்தினார்.

## ஃப்ளாஷ்பேக்



எஸ்.ராஜேந்திரன்



### விருந்தினர் விடுதி சந்திப்பு!

1995 -ஆம் ஆண்டு கழக இளைஞர் அணிச் செயலாளராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள், அரியலூர் மாவட்டத்திற்கு கழக கொடியேற்றும் நிகழ்வுக்காக வருகை தந்திருந்தார். அப்போது நான் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தேன். அ.தி.மு.க.வின் சர்வாதிகார ஆட்சியை விமர்சித்துப் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார். இந்தக் கூட்டத்துக்கு முன் விருத்தாசலத்தில் உள்ள விருந்தினர் விடுதியில் தளபதி தங்கி இருந்த போது, அவரைச் சந்தித்து எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**-எஸ்.ராஜேந்திரன்,**
**கை.களத்தூர் கிளைச் செயலாளர்,**
**பெரம்பலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அணிகள் உதயம்!

1980-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 2-ஆம் தேதி திருச்சியில் கலைஞர் தலைமையில் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், தி.மு.க சட்டத் திட்ட விதிகள் பிரிவு -9 ஐ திருத்தம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, கழகத்தின் தொண்டர் அணி, இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, தொழிலாளர் அணி, விவசாயிகள் அணி, இலக்கிய அணி ஆகியவை முறைப்படி அமைக்கப்பட்டன.

## முதன் முதலில் 4

**ந.வினோத்குமார்**

திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் ‘திராவிட மரபு’ தொடர் இது...









# மாநாடுகளும் குடும்பங்களும்!

*‘தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, கட்சி மாநாடு என்றாலே அது திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகின்ற மாநாடுதான். மற்றவை எல்லாம் பஞ்சாயத்துக் கூட்டம்’ என்று சொல்லும் அளவுக்குத்தான். அளவிலும் கருத்திலும் மிகப் பிரமாண்டமானவை, நம் கழகம் நடத்தும் மாநாடுகளே.*

*தி.மு.க. நடத்திய முதல் மாநாடு, திருச்சியில் நடைபெற்றது. அது மாவட்ட மாநாடு. அந்த மாநாடே மாநில மாநாட்டுக்கு இணையான பிரமாண்டத்தோடு நடைபெற்றது. அது குறித்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதியிருக்கும் இந்தச் சித்திரத்தைப் பாருங்கள்...*

**“மாவட்ட மாநாட்டுக்கான கொட்டகை அமைக்கப்பட்டுவிட்டது. மறுநாள் மாநாடு. முன்னாள் மாலை சென்று பார்க்கிறேன். பசியுடன் உள்ள பெரும்புலி தன் அகன்ற வாயைத் திறந்து கொண்டிருப்பது போல, கொட்டகை காட்சி அளிக்கிறது.**

**“சாம்பு”**

**“என்னண்ணா?”**

**“பந்தல்... கொட்டகை”**

**“அவசரத்தில் போட்டது. இவ்வளவுதான் முடிந்தது”**

**“இவ்வளவுதான் முடிந்ததா? என்ன விளையாடுகிறாய்? இவ்வளவு பெரிய கொட்டகையை ஏன் போட்டாய்? யார் போட சொன்னது? இவ்வளவு பெரிய கொட்டகைக்கு ஆட்கள் எங்கிருந்து கொண்டு வந்து குவிப்பது? நாளைக்கு இதிலே கால் பகுதிக்குக் கூட தோழர்கள் வருவார்களோ இல்லையோ? இவ்வளவும் நாளைக்கு காலியாக இருக்குமே! எப்படி அந்த அவமானத்தைத் தாங்குவது! என்ன வம்பு செய்துவிட்டாய் சாம்பு?”**

*ஆனால், அண்ணா பயந்தது போல் நடக்கவில்லை. மாறாக, மாநாட்டுப் பந்தலுக்கு அடங்காமல் கூட்டம் குவிந்தது. அந்த முதல் மாவட்ட மாநாடு மட்டுமல்ல, அதற்குப் பிறகு கழகம் நடத்திய ஒவ்வொரு மாநாட்டிலும் கூட்டம் அலைகடலெனத் திரண்டு கொண்டே இருக்கிறது. அதன் சமீபத்திய அலையைத்தான் இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டில் நாம் பார்த்தோம்.*

*இந்த மாநாடுகள் அனைத்திலும் ‘உடன்பிறப்புகள்’ தங்கள் குடும்பங்களுடன் கலந்துகொண்டனர். முன்பெல்லாம், மூன்று நான்கு நாட்களுக்கு மாநாடுகள் நடக்கும். அப்போதெல்லாம், ஒரு பக்கம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத் தொட்டில் கட்டி தூங்க வைக்க, இன்னொருப் பக்கம் விடிய விடிய உணவு தயாராக, வேறொரு பக்கம், மாநாட்டு உரைகள் குறித்து விவாதங்கள் களைகட்ட, அந்த மாநாடுகளில் புதிய நண்பர்கள் கிடைத்து, தங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு வரன் கிடைத்து, பிறகு உறவாகி என எத்தனையோ குடும்பங்கள் கழகக் குடும்பங்களாகி இருக்கின்றன.*

*காலமும் சூழலும் மாறி வரும் இந்த நாட்களில், மாநாடுகள் நடைபெறும் நாட்கள் குறைந்திருக்கலாமே தவிர, மாநாட்டுக்கு வரும் குடும்பங்களின் எண்ணிக்கை குறையவில்லை. ஆமாம்... தி.மு.க. என்பது குடும்பங்களின் கட்சிதான்! அரசியல் மாநாடுகள் என்றால், அதில் கட்சிக்காரத் தொண்டர்கள் மட்டும்தான் கலந்துகொள்வார்கள் என்ற நிலையை மாற்றி, அவற்றைக் குடும்ப நிகழ்வுகளாக மாற்றியது என்கிற விதத்தில், கழகத்தை வீடுகளுக்குள் எடுத்துச் சென்ற அந்த மரபைத் தொடங்கியது தி.மு.க.தான்!*


...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ் 4**

“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# தீட்டாயிடுத்தா?




*கர்நாடக சங்கீதம் என்றாலே, ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர்தான் நினைவுக்கு வருவார்கள். அத்தகைய கர்நாடக சங்கீதத்துக்கு மெருகூட்டும் இசைக் கருவிகள், பல்வேறு சமூகத்தினரின் பங்களிப்போடு தயாரிக்கப்படுபவை. கர்நாடக சங்கீதத்தில் வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம், கடம் என பல்வேறு வாத்தியங்கள் இருந்தாலும், மிருதங்கம் தனிச்சிறப்புடையது. காரணம், அது தோல் வாத்தியம். மாட்டுத்தோல், ஆட்டுத்தோல் என இதன் மூலப்பொருட்கள் அனைத்தும் பார்ப்பனர்களால் தீண்டப்படாத பொருட்கள்.*

*மிருதங்கம் தயாரிப்பவர்கள் பெரும்பாலும் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். பின்னாளில் இவர்கள் காலனிய ஆதிக்கத்தின் காரணமாகவும், சாதிய ஒடுக்குமுறையின் காரணமாகவும் கிறிஸ்துவ மதத்துக்கு மாறினார்கள். அதில் ஒருவர்தான் செபாஸ்ட்டியன். அவரது குடும்பம் தஞ்சாவூரைப் பின்புலமாகக் கொண்டது. பின்னாளில் அவரது குடும்பம், மிருதங்கத் தயாரிப்பு சாம்ராஜ்ஜியமாக உருமாறியதால், இந்நூலின் பெயரும், SEBASTIAN & SONS: A BRIEF HISTORY OF MRDANGAM MAKERS என்றே அமைந்துள்ளது.*

*மிருதங்கம் தயாரிப்பவருக்கும்-வாசிப்பவருக்கும் இடையே இருந்த சாதிய முரண்பாடுகளை, பிற்காலத்தில் நகரமயமாதலாலும், நவீன மயத்தின் காரணமாகவும் அது எவ்வாறு மாற்றம் அடைந்தது என்பதையும் செபாஸ்ட்டியன் குடும்பத்தின் கதையோடு பிணைத்துள்ளார் நூலாசிரியர் ‘சங்கீத கலாநிதி’ டி.எம். கிருஷ்ணா. இந்த உற்பத்தி உறவு முறையில் பெரியார் கண்ட திராவிட இயக்கத்தின் தாக்கத்தையும் அவர் ஓர் இடத்தில் பதிவுசெய்கிறார்.*

*மிருதங்கத்தின் தயாரிப்பு முறை மிகவும் கடினமானது. மனித உழைப்பை உறிஞ்சி எடுக்கக் கூடியது. அதே சமயத்தில் கலை வேலைப்பாடுகளால் ஆனது. தரமான பலா மரக் கட்டைகளைச் சேகரித்தல், மாட்டுத்தோல் மற்றும் ஆட்டுத்தோல் பதப்படுத்தல், அவற்றை தோல் கயிற்றின் மூலம் இணைத்தல், பிறகு சத்தத்துக்கு ஏற்ப முறைப்படுத்துதல் எனச் சிக்கலான தயாரிப்பு முறையை வேண்டி நிற்கும் வாத்தியம் மிருதங்கம். இதைப் பற்றி மிக விரிவாகவும், களஆய்வுகளுடனும், துறைசார் நிபுணர்களுடைய நேர்காணல் களுடனும் இந்நூலில் கிருஷ்ணா பதிவு செய்துள்ளார்.*

*இந்நூலின் மூலம் மிருதங்கம் தயாரிக்கும் குடும்பங்களின் வரலாறும், அவர்கள் இந்தத் தொழிலில் அடைந்த சரிவுகளும், அவற்றிலிருந்து கற்ற பாடங்களும் அதேநேரத்தில் கர்நாடக சங்கீதத்தில் இருந்து இவர்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளதையும் அறியலாம். குறிப்பாக, மிருதங்கம் தயாரிக்கும் தலித் கிறித்துவர்களின் வாழ்க்கைத் தரம் சாதி என்ற ஒற்றைக் காரணத்தால் பெரிய அளவில் பொருளாதார ரீதியில் மேன்மை பெறவில்லை.*

*‘மிருதங்க வித்வான்’ என கொடுக்கப்படும் அங்கீகாரம் அதனை வடிவமைக்கும் தயாரிப்பாளனுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்பதை வருத்தமாகப் பதிவு செய்கிறார் நூல் ஆசிரியர் டி.எம். கிருஷ்ணா. பிறப்பால் ஒரு பிராமணரான டி.எம்.கிருஷ்ணா, சொந்த சமூகத்தை விமர்சனபூர்வமாகவும் அணுகியுள்ளார். அவர் கொண்டுள்ள இந்தப் பக்குவம்தான் சாதி-மத ஆதிக்க சக்திகளால் அவர் எதிர்க்கப்படுவதற்கும் காரணமாக இருக்கிறது. இந்த நூல் காலச்சுவடு பதிப்பகத்தால் ‘செபாஸ்டியன் குடும்பக் கலை’ என்ற தலைப்பில் தமிழிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.*

**பிறப்பால் ஒரு பிராமணரான டி.எம்.கிருஷ்ணா, சொந்த சமூகத்தை விமர்சனபூர்வமாகவும் அணுகியுள்ளார்.**


*பெரியாரைப் பற்றி கிருஷ்ணா பாடியதால் ‘கர்நாடக சங்கீதத்தின் புனிதம் கெட்டுவிட்டது’ என்று சொல்பவர்கள், மிருகத் தோலால் செய்யப்படும் மிருதங்கத்தை வாசிப்பதால், கர்நாடக சங்கீதம் தீட்டாகிவிட்டதா என்பதையும் சொல்ல வேண்டும். சொல்வார்களா..?*

,,,வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

429

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.